விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 24 வைகாசி 31 ஷபா 21 இதழ் 121
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 14—6—82

# பஸ் சாரதி தாக்குதல்பற்றி உடன் விசாரணை நடத்துக!

## ஜனாதிபதிக்கு சிவா, யோகேஸ் தந்தி

யாழ்ப்பாணம்]
யாழ் பஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் இ.போ.ச. சாரதி திரு. ஆர். தங்கராசா ஆயுதம் தாங்கிய கோஷ்டியினரால் கடுமையான தாக்குதலுக்குள்ளானர் என்றும் இது குறித்து உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் நல்லூர், யாழ். பாராளுமன்ற உறுப்பினர்களான திருவாளர்கள் மு. சிவசிதம்பரமும், வெ. யோகேஸ்வரனும் ஜனாதிபதியை தந்தி மூலம் கோரியுள்ளனர்.

''சனிக்கிழமை பிற்பகல் இரண்டு மணியளவில் 29 ஸ்ரீ 288 இலக்க இ. போ. ச, பஸ் வண்டியை செலுத்திக் கொண்டிருந்த சாரதி திரு. ஆர். தங்கராசாவை 9 ஸ்ரீ 7761 இலக்க காரில்வந்த ஆயுதம் தாங்கிய காவல்படையினரென கருதப்படும் கோஷ்டியினர் இரக்கமற்றமுறையில் பஸ் நிலையத்தில் தாக்கினார்கள். அத்துடன் அவரிடமிருந்த ரூபா 450 பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளது. அப்பாவியான இச் சாரதிமீது

(8-ம் பக்கம் பார்க்க)

# சவூதி மன்னர் காலித் மாரடைப்பால் காலமானர்

## இளவரசர் பாத் புதிய மன்னர்

(றியாட்)

**சவூதி அரேபியா மன்னர் ஜனப் காலித் நேற்றுக் காலை மாரடைப்பினுல் காலமானர். 1975ம் ஆண்டு பெப்ரவரி மாதம் சவூதி அரேபியா மன்னராக இவர் முடிசூட்டப்பட்டார். இவருக்கு வயது அறுபத்து ஒன்பது.**

புதிய முடிக்குரிய மன்னராக ஜனப் பாத் பதவியேற்றதுடன் இளவரசராக அப்துல்லா பதவிப்பிரமாணம் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னர் காலித் மறைவைத் தொடர்ந்து சவூதி அரேபியாவின் எண்ணெ விவகாரம், பொருளாதாரக் கொள்கை, அரசியல் நிலைமை ஆகியவற்றில் எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்சிபுரியும் குடும்ப அங்கத்தவர்கள் புதிய மன்னருக்கும் இளவரசருக்கும் பூரண ஆதரவை வழங்கியுள்ளனர்.

புதிய மன்னர் பாத் 1975ம் ஆண்டு முடிக்குரிய இளவரசராகப் பதவியேற்றார். எண்ணை விவகாரம், பாதுகாப்பு, அரசியல் நிலை ஆகியவற்றில் இவர் நேரடியாக சம்பந்தப்பட்டிருந்தார்.

### ஜனஸா நல்லடக்கம்

மன்னர் காலித்தின் ஜனஸா தலைநகரில் நேற்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

### இந்தியாவில் துக்கம் அனுஷ்டிப்பு

(புதுடில்லி)

சவூதி அரேபிய மன்னர் காலித் மறைவுகுறித்து பாரதத்தில் பல இடங்களில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

தேசிய கொடிகள் தலைநகரிலுள்ள கட்டிடங்களில் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளன. (க)

# ஜனாதிபதி சார்பில் முகமட் நேரில் அஞ்சலி

[கொழும்பு]

சவூதி அரேபியா மன்னர் காலித் மறைவுகுறித்து ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன கவலை தெரிவித்துள்ளார்.

சவூதி அரேபிய மன்னர் காலித் மறைவுகுறித்து செய்தியொன்றையும் ஜனாதிபதி அனுப்பிவைத்துள்ளார்.

ஜனாதிபதி சார்பில் போக்குவரத்து அமைச்சர் ஜனப் எம். எச். முகமட் நேரில் அஞ்சலி செலுத்துவதற்காக றியாட் புறப்பட்டுள்ளார். அமைச்சர் முகமட் ஜனாதிபதியின் செய்தியைப் புதிய மன்னர் பாத்திடம் நேரில் சமர்ப்பிப்பார்.

# கொழும்பு ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டனர்

[யாழ்ப்பாணம்]

தபால் புகையிரதபெட்டியில் குண்டுவெடித்து படுகாய

(8-ம் பக்கம் பார்க்க)

# மக்கள் வங்கியில் மீண்டும் நகை அடைவு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி மக்கள் வங்கி கொள்ளையைத் தொடர்ந்து நிறுத்திவைக்கப்பட்டிருந்த நகை அடைவு பிடிப்பு மக்கள் வங்கிபொதுமுகாமையாளரின் பணிப்பின்மீது மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நகை அடைவுமீது ஒரு பவுணுக்கு ரூபா 1,000 வழங்கப்படுமெனவும், ஆகக்கூடிய தொகை ரூபா 15,000/- எனவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். நகரிலுள்ள நவீன சந்தை மக்கள் வங்கி கிளையில் கடந்த புதன்கிழமை அடைவு பிடிப்பு ஆரம்பமானது. ஸ்ரான்லி வீதியிலுள்ள கிளையில் வெள்ளிக்கிழமை முதல் நகை அடைவு பிடிப்பு ஆரம்பிக்கப்பட்டது.

நாள் ஒன்றுக்கு 25 பேர்களுக்கு மட்டுமே தற்போது அடைவுபிடிக்க முடியுமெனவும், ஒருவருக்கு ஒருநகைமட்டுமே அடைவு பிடிக்கப்படுமெனவும் நாளடைவில் தொகை அதிகரிக்கப்படலாமெனவும் தெரியவந்துள்ளது. பலத்த பாதுகாப்புக்களுடனும் முகாமையாளரின் நேரடிக்கண்காணிப்பிலுமே இவை நடைபெறுகின்றன. (சி)

# தனியார் கல்விநிலையங்களில் பலத்த சோதனை!

(யாழ்ப்பாணம்)

யாழ்-கொழும்பு இரவு ரயிலின் தபால் பெட்டியில் நிகழ்ந்த குண்டுவெடிப்பு மற்றும் வெடிகுண்டு பார்சல்கள் தொடர்பாக யாழ் மாவட்டத்திலுள்ள பல தனியார் கல்வி நிலையங்கள் (டியூட்டரிகள்) ஆயுதப் படையினரின்கடுமையான சோதனைக்குள்ளானது.

குறிப்பிட்ட வெடிகுண்டு பார்சல்களில் காணப்பட்ட விலாசங்கள் தட்டச்சுயந்திரம

[8-ம் பக்கம் பார்க்க]

# சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி இன்று முத்திரை வெளியீடு

[யாழ்ப்பாணம்]

சேர். வைத்திலிங்கம் துரைசுவாமியின் நினைவு முத்திரை வெளியீட்டு வைபவம் இன்று காலை பத்து மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும். ஞாபகார்த்த முத்திரையை யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன் வெளியிட்டு வைப்பார்.

ஐம்பதுசத நினைவு முத்திரையை தபால் அமைச்சர் வெளியிட்டு வைக்கவிருந்த போதிலும் கடைசி நேரத்தில் தபால் அமைச்சரின் விஜயம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது

# போக்லண்ட் தலைநகரை பிரி. படைகள் சுற்றிவளைத்தன!

## ஓரிரு தினங்களில் இறுதித்தாக்குதல்

லண்டன், ஜூன் 13

போக்லண்ட் தலைநகரான போர்ட் ஸ்ரான்லியை மீண்டும் கைப்பற்றுவதற்காக பிரிட்டிஷ் படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

பிரிட்டிஷ் படைகளின் தாக்குதலின் போது இரு ஆர்ஜென்டீன நிலைகள் கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கேந்திர ஸ்தானமொன்றை பிரிட்டிஷ் படைகள் நேற்று கைப்பற்றியதுடன் 5 மைல்கள் முன்னேறியுள்ளன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இன்னும் இரண்டொரு நாட்களில, தலைநகரை மீண்டும் கைப்பற்றும் இறுதித் தாக்குதல் இடம்பெறும் என்று பிரிட்டிஷ் வட்டாரங்கள் தெரிவித்தன.

### கடைசி செய்தி

**போக்லண்ட் தலைநகரான போர்ட்ஸ்ரான்லியில் 300 ஆர்ஜென்டீனபடைவீரர்கள் சிறைபிடிக்கப்பட்டுளதாக கடைசியாக லண்டனுக்கு கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.**

தலைநகரான போர்ட் ஸ்ரான்லியை 4500 படைவீரர்கள் சுற்றிவளைத்துள்ளதை ஆர்ஜென்டீன ஒப்புக்கொண்டுள்ளது.

இச் செய்தியை எழுதும் போது தலைநகிரில் பலத்த பீரங்கித் தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவித்தன.

# இளைஞர்கள் மீது விசாரணை

[யாழ்ப்பாணம்]

அண்மையில் நிகழ்ந்தகுண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக சில இளைஞர்கள் ஆயுதப்படையினரால் சந்தேகத்தின் பேரில் விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. [மா-இ]

# தனியார் பஸ்சேவை: 1641 பேருக்கு அனுமதி!

[கொழும்பு]

பதிதாக 1641 பேருக்கு தனியார் பஸ் சேவை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது

தனியார் பஸ் போக்குவரத்து சேவை அமைச்சு இதற்கு அனுமதி வழங்கியுள்ளது. (க)

# பிணைமனு இன்று தாக்கல்

[சென்னை]

சென்னையில் கைது செய்யப்பட்ட இலங்கை தீவிரவாத தமிழ் இளைஞர்களை பிணையில் விடுவிக்குமாறு கோரும் மனுவை சிரேஷ்ட வழக்கறிஞர் திரு. ராதாகிருஷ்ணன் இன்றுகாலை சென்னைசெஷன்ஸ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்வார்.

சென்னையில் கைதுசெய்யப்பட்டு சென்னை மத்திய சிறையில் காவலில் வைக்கப்பட்டிருக்கும் பிரபாகரன், உமாமகேஸ்வரன் உட்பட ஏழு பேரையும் பிணையில் விடுவிப்பது சம்பந்தமாக இவர்கள் சார்பில் ஆஜராகும் வழக்கறிஞர்கள் நேற்றுக்கூடி இறுதி ஆலோசனை நடத்தினர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

வீடு கட்டுவதற் கேற்ற காணிகள் நல்லூர், திருநெல்வேலி, நாவற்குளியிலும், புதிய வீடு நல்லூரிலும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளும் முகவரி; 52. வைமன்வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 334. [3530]

கொக்குவில்குளப்பிட்டிச்சந்திக்கு அருகாமையில் 2 பரப்புக் காணி உண்டு. சிவநேசன் வீடு, மஞ்சவனப்பதி றேட், கொக்குவில் மேற்கு. (3520)

எங்கள் ''கிலீன் ஆல்'' தொற்று நாசினி "Cleanall" (Disinfectant)யின் ஒரு(625ML) போத்தலின் சில்லறை விலை ரூபாய் இருபது (Rs. 20/-) என்பதை எங்கள் வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கிறோம். ஜயந்தி என்றபிறைஸஸ் ஆவரங்கல் புத்தூர். (PO) 3534

இரண்டு கடைகள் போடுவதற்குரிய கதவுகள், மரங்கள், ஓடுகள் சகலதும் விற்பனைக்குண்டு ஸ்ரீமாஸ்டர், 181, நாவலர்வீதி, மனோகராதியேட்டருக்கு அருகாமை, யாழ்ப்பாணம். 3536

### தேவை

நன்கு பயிற்றப்பட்ட தாதிகள் உடனடியாகத் தேவை சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்கவும். இயக்குனர், சென்றல் நேர்சிங் ஹோம், 350, பலாலி வீதி, திருநெல்வேலி. [3529]

கொழும்பில் இருக்கு ரவல் ஸ்தாபனத்துக்கு கிளை ஸ்தாபனமாக யாழ்ப்பாணத்தில் செயலாற்றும் கந்தோரில் அனுபமுள்ள இயக்குநர் தேவைப்படுகிறது. யாழ்ப்பாணத்தில் உள்ள கந்தோரின் சகல தொழிற்பாட்டுக்கும் பொறுப்பாளராகச் செயற்படும் தகுதி உடையவர்களே விண்ணப்பிக்க வேண்டும் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். கல்வித் தகைமை, அனுபவம், வயது, எதிர்பார்க்கும் வேதனம், தற்சமயம் எங்கு எவ்வளவு வேதனத்தில் என்ன தொழில் பார்க்கிறீர்கள் என்று தெளிவாக விண்ணப்பியுங்கள். யாழ் நகரில் வசிப்பவர்கள் மட்டுமே விண்ணப்ப தாரிகளாகலாம். விண்ணப்பங்களை கீழ்காணும் விலாசத்திற்கு 30-6-82க்கு முன்பாக அனுப்பிவையுங்கள். Trust Travel Service 6, Hospital Street, Colombo-1. 3511


## மகா ஞானஒடுக்கம்

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிப்பு-விளான் பங்குகளின் மகாஞான ஒடுக்கம் இம்மாதம் முதலாம் திகதியன்று ஆரம்பமாகிதொடர்ந்து நடைபெற்றுவருகின்றது அடுத்தமாதம் இரண்டாம் திகதிவரை நடைபெறவுள்ள இந்த ஞானஒடுக்கம் நிகழ்ச்சிகள் பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயம் விளான் புனித அந்தோனியார் ஆலயம் விளான் புனித யுவானியார் ஆலயம் பண்டத்தரிப்பு செபமாலை அன்னை ஆலயம் ஆகிய ஆலயங்களில் இடம்பெற்று வருகின்றன.

சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், விவாத மேடைகள், நற்கருணைத் தினம், தொழிலாளர் தினம், பாடசாலைப் பிள்ளைகளுக்கான பயிற்சிப் பாசறை ஆகிய நிகழ்ச்சிகள் இந்த ஞான ஒடுக்கத்தில் நடைபெற்றுவருகின்றன.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில்

திருகோணமலை, கச்சேரி வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற மயில்வாகனம் கைம்பெண் அழகசுந்தரம் என்பவரின் மரணசாதனத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர் சாமுவேல் பத்மராசா பொன்னையா பெண் பரிமலர்சோதி, 31 வ... யார்வீதி, திருகோணமலை.

மனுதார்.

மரணசாதன.
நியாயாதிக்கம் இல. 560

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள்எவரும் 1982ஆம் ஆண்டு ஆனி மாதம் 18-ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு, இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

சி. இராமலிங்கம்
பதிவாளர்

1982ஆம் ஆண்டு ஆனிமாதப் 2-ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 3525

## பிள்ளைத்தமிழ் நூல்வெளியீடு

[சுழிபுரம்]

'பேசாதவனை பேசவைத்தவர் முருகன். முருகன் பிள்ளைத்தமிழ் மெய்யடியார்களை நன்கு உருகவைக்கும் இன்பரசம் முருகன் அருளை வேண்டி வழிபடும் எமக்கு இந்நூல் மிகச்சிறந்ததொன்றாகும்.

இவ்வாறு விசவத்தனை முருகன் பிள்ளைத்தமிழ்நூல் வெளியீட்டுவிழாவைத் தொடக்கி வைத்துப்பேசிய எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.

வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு தலைமையில் விழா நடைபெற்றது. பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நூலை வெளியிட்டுவைத்தார். முதற் பிரதியை பிரபல வர்த்தகர் து, இராசரத்தினம் பெற்றுக் கொண்டார். பண்டிதை பொன். பாக்கியம், அ. ஆறுமுகம், க. வாமதேவன் ஆகியோரும் உரையாற்றினர்.

## இன்று நடக்கும் கலைவிழா

(அரியாலை)

நல்லூர்தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வர வித்தியாலயத்தின் கலைவிழா இன்று திங்கட்கிழமை மாலை வித்தியாலய மண்டபத்தில்நடைபெறும்.

வித்தியாலய அதிபர் திரு. ப. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெறும். இக் கலைவிழாவில் பிரதம விருந்தினராக வடமாநிலக் கல்வி அதிபதி திரு க. சிவநாதனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாண மாவட்ட அமைச்சர் திரு யூ. பி. விஜயக்கோன், யாழ்ப்பாணத்தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு வெ. யோகேஸ்வரன், யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபையின் செயலாளரும், யாழ்ப்பாண அரசாங்க அதிபருமான திரு தேவநேசன் நேசையா, புங்குடுதீவு கொத்தணிப்பாட

(7-ம் பக்கம் பார்க்க)

## "அருட் பாடல்கள் மூலம் இறையருளைப் பெறலாம்"

(சுழிபுரம்)

'சைவ ஆலயங்களுக்குச் செல்பவர்களது கைகளில் இறைவனுக்கு அர்ப்பணிப்பதற்கு அர்ச்சனைப்பொருட்கள் கொண்டுசெல்வதுபோல, உளத்தில் மனனம்செய்யப்பட்ட அருட்பாடல்களை இறைவனுக்கு அர்ப்பணித்து இறையருளைப்பெற்றுக்கொள்ளலாம். இதற்கு அருட்பாடல்களை மனனம்செய்துகொள்ள வேண்டும். இறைவன் அருட்பாடல்களைத்தான் அதிகம் விரும்பியுள்ளார் என்பதை எமது அருளார்கள் எமக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளனர். இளம் பராயத்தில் மனனஞ்செய்வது சுலபம். ஆதலால்தான் வழக்கம்பரை சன சமூக பஜனைச் சபையினர் வருடம்தோறும் மனனப் போட்டிகளை நடத்தி இளையோரை ஊக்குவித்துவருகின்றனர். இதற்குப் பெரியோர்கள் தகுந்த ஆதரவுநல்க வேண்டும்.'

இவ்வாறு சுழிபுரம் பறுளை சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் நடைபெற்ற கந்தரநுபூதிப் போட்டி பரிசளிப்பு விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசிய பஜனைச்சபைத் தலைவர் திரு. க. வாமதேவன் குறிப்பிட்டார்.

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு சுழிபுரம் யோகி. கா. கார்த்திகேசு பரிசுகளையும் சான்றிதழ்களையும் வழங்கினார். இப்போட்டிக்கு தொழிலதிபர் திரு. க. கனகராசா பல பரிசுப்பொருட்களை வழங்கினார்.

## மன்னார் ஐ.தே.க. கிளைகள் புனரமைப்பு

[மன்னார்]

மன்னார் மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி கிளைகளைப் புனரமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு மூதூர் எம். பியும், மன்னார்மாவட்ட அமைச்சருமான ஜனாப் எம். எம். ஈ.எச். மஹ்றூப் தலைமையில் மாவட்ட அமைச்சரின் மன்னார் இல்லத்தில் நடைபெற்ற மத்திய குழுக் கூட்டத்தில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

மன்னார் மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. கயஸ் பெசிடானோ பேசாலை, மன்னார்மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் ஜனாப் எஸ்.

(5-ம் பக்கம் பார்க்க)


பிரபல தென்னிந்திய சினிமா பின்னணிப் பாடகர்களின்

# தேன் இசைமழை

காரைநகர்-கிழக்கு திக்கரை முருகன் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை இரவு 10 மணிக்கு தமிழகத்தில் இருந்து வரவழைக்கப்பெற்ற

★ வி. கிருஷ்ணமூர்த்தி
★ கோவை வசந்தா

ஆகியோரின் இன்னிசைக்கச்சேரி நடைபெறும்

இங்ஙனம்
3-ம் திருவிழா உபயகாரர்கள். 3538



# மாபெரும் விலை குறைப்பு

## "KAWASAKI" MOTOR CYCLE

(கவசாக்கி)

விலை விபரம்

| | |
|---|---|
| KC 90 | Rs 9,990/- மட்டுமே |
| KH 100 EL | Rs 11,950/- மட்டுமே |
| KH 100 ES | Rs 12,950/- மட்டுமே |
| GTO - 110 | Rs 15,500/- மட்டுமே |
| KH 125 | Rs 13,750/- மட்டுமே |
| Z 200 | Rs 22,500/- மட்டுமே |

இவ்விலை குறைப்பு கையிருப்பு முடியும் வரை மட்டுமே!

## "USHA" குளிர் சாதனப் பெட்டி

விசேஷ அம்சங்கள் ஆவன!

1. உலகில் பிரசித்தி பெற்ற "DANFOSS" Compressors
2. தன்னியக்க முறையில் துப்பரவு செய்யக்கூடிய "DEFROST THERMOSTAT"

பொருத்தப்பட்டதனால் இன்று எல்லோராலும் விரும்பப்படுகிறது.

விலை விபரம்

| | Ordinary | Deluxe |
|---|---|---|
| 6 Cu. ft. | Rs 7,050/- | Rs 7,350/- |
| 8 do | Rs 7,750/- | Rs 8,150/- |
| 9 do | Rs 8,750/- | Rs 9,250/- |

மேலும் விபரங்கட்கு!

ASSOCIATED MOTORS & ELECTRICALS
285 - 287, STANLEY ROAD, JAFFNA.
தொலைபேசி; 7340 (3539)



யாழ்/சாவகச்சேரி இந்துக்கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

# அங்குரார்ப்பணக்கூட்டம் 1982

மேற்படி கூட்டம் புதிய யாப்பின்படி 28-6-82 திங்கட்கிழமை மாலை 3-30 மணிக்கு அதிபர் அவர்கள் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பெற்றோர், பாதுகாவலர்கள், மேற்படி கல்லூரி ஆசிரியர்கள் அனைவரும் தயவுசெய்து தவறாது சமுகந்தரவும்.

அதிபர். இணைக்காரியதரிசிகள்
3523

# வெளிநாட்டு உதவியுடன்

## சோமாலியா அரசைக் கவிழ்க்க சதி

### சிரேஷ்ட அமைச்சர்கள் கைது!

லண்டன், ஜூன். 13 சோமாலியா அரசை வெளிநாடு ஒன்றின் உதவியுடன் கவிழ்க்கச் சதிசெய்ததாக பல சிரேஷ்ட அமைச்சர்களும் இராணுவ உயர்அதிகாரிகளும் கட்சித்தலைவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சதி முயற்சிக்கு உதவிய வெளிநாட்டின் பெயரைவெளியிட சோமாலிய அதிகாரிகள் மறுத்துவிட்டனர், (இ)

# ஈரான்-ஈராக்யுத்தம் முடிவுக்கு வருமா?

பெய்ரூட், ஜூன். 13 1980 செப்டம்பரில் ஆரம்பமான ஈரான்-ஈராக் போரில் ஈடுபட்ட படைகள் பழைய எல்லைக்கோட்டை அடைந்துள்ள இன்றைய கட்டத்தில் இப்போர் முடிவடையும் சூழ்நிலையில் இல்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றன

எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளைப் பொறுத்தமட்டில் நிலைமை சகஜமடைய வேண்டுமென்று விரும்புகின்றன. வாஷிங்டன், ஈரானுடன் உள்ள எதிர்ப்பை வைத்துக்கொண்டு நெருக்கடி ஏற்படுத்திவருகிறது.

அரபுநாடுகளுக்கும் ஈரானுக்குமிடையில் உள்ள பகைமை நிலைத்து நிற்கும் என்றும் பிரசாரம் செய்யப்படுகிறது. நிலைமை சகஜமடைய போர் நிறுத்தம் அமுலாக்கப்பட வேண்டும் என்று கோரப்படுகிறது.

சில தினங்களுக்கு முன்னர் அமெரிகக ராஜாங்கக் காரியதரிசி திரு அலெக்ஸாண்டர் ஹேய்க் இப்பகுதியில் பதட்டத்தைத் தவிர்க்க அமெரிக்கா முழுமுயற்சி மேற்கொள்ளும் என்று கூறினர். ஆனல் ஈரான் மீது வாஷிங்டன் பொருளாதார தடை விதித்துள்ளது.

நிலைமைஇவ்வாறிருந்தபோதிலும் இப்பிராந்தியத்திலிருந்து அமெரிக்கப்படைகள் வாபஸாகும்வரை அமைதி ஏற்படாது என்று கூறினர்.

# "இலங்கை அரசிடம் ஒப்படைக்க வேண்டாம்"

## இந்திய அரசுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

சென்னையில் கைதான தீவிரவாத இலங்கைத் தமிழ் இளைஞர்களான உமாமகேஸ்வரன், பிரபாகரன் ஆகியோரை இலங்கை அரசாங்கத்திடம் ஒபபடைக்க வேண்டாமெனக் கேரி கடிதமொன்றை இலங்கை ஆசிரியர் சங்கம் இந்திய அரசாங்கத்துக்கு அனுப்பிவைத்துள்ளது

இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் மூலமாக இந்திய அரசாங்கத்தக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் அக்கடிதத்தில் 4 ,000அங்கத்தவர்களைக் கொண்ட மேற்படி ஆசிரிய சங்கத்தின் சார்பில் அதன் பொதுச்செயலாளர் திரு. எச். என் பெர்னண்டோ கையொப்பமிட்டுள்ளார். (கி)

## பாரதி நூற்றுண்டு விழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை உதயசூரியன் அறிவகத்தினதும், சனசமூக நிலையத்தினதும் பாரதி நூற்றுண்டு விழா நாளை மறுதினம் மாலை அறிவக அரங்கில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவை யாழ்ப்பாண மாவட்ட சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஆ. நடராசா மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்.

மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் தொடக்கவுரையும், பண்டிதர் மு. கந்தையா ஆசியுரையும் நிகழ்த்துவார்.

இவ்விழாவில் இடம்பெறும் ஆய்வரங்கில் எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம், காரை செ. சுந்தரம் பிள்ளை ஆகியோரும் உரையாற்றுவர்.

## கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது

[பண்டத்தரிப்பு]

சங்கானை வடக்கு கிராமோதய சபையின் பொதுக்கூட்டம் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி மண்டபத்தில் சபைத்தலைவர் திரு இ. செல்வரத்தினம் தலைமையில் ஆரம்பமான போது பெரும்பாலான உறுப்பினர்கள் சமூகமளிக்காததால் கூட்டம் பிறிதொரு தினத்திற்கு ஒத்தி வைக்கப்பட்டது.

## பரிசோதனைக்குழு திடீர் விஜயம்

(கரவெட்டி)

யாழ், கல்வித்திணைக்களத்தைச்சேர்ந்த கல்வி அதிகாரிகளைக் கொண்ட குழு உடுப்பிட்டிக்கல்வி வட்டாரத்தில் மேற்கொண்ட திடீர் பரிசோதனையில் கரவெட்டியிலுள்ள கல்லூரி ஒன்று தப்பித்துக் கொண்டது.

பிரஸ்தாப திடீர் பரிசோதனைக்குழு இக் கல்லூரிக்குச் சென்றபோது அக்கல்லூரி நடைபெருது மூடப்பட்ட நிலையில் இருந்ததால் பரிசோதனைக்குழு ஏமாந்த நிலையில் சென்றது.

### உ. அ. அதிபர் பிரிவு தோறும்

# 10 பேருக்கு பசு வளர்க்க வங்கிக் கடனுதவி

[கரவெட்டி]

"அரசாங்கத்தினுல் கால்நடைவளர்ப்போர்க்கென ஆரம்பிக்கப்பட்ட கடன் வழங்கும் விசேஷ திட்டத்தனை் யாழ். மாவட்டத்தில் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்தும் தலா இரண்டு பசுமாடுகளை வளர்க்கும் பத்துப்பேர் இலங்கை வங்கியின் மூலம் கடன்பெற வசதிசெய்யப்பட்டுள்ளது. ஆனல் விவசாயத்திற்குப் பெயர்பெற்ற கிளிநொச்சியில் இருந்து இருபத்தைந்துபேர் கடன்பெற முடியும்"

இவ்வாறு இலங்கைவங்கியின் நெல்லியடிக் கிளைப் பிரதிமுகாமையாளர் திரு வீ. தில்லைநாதன் நெல்லியடி மத்திய மாவித்தியாலயத்தில் நடைபெற்ற வடமாட்சிப் பகுதிக்கால்நடை வளர்ப்போர்க்கான கருத்தரங்கில் பேசுகையில் குறிப்பிட்டார்

புலோலிகால்நடை வைத்திய அதிகாரி திரு.சுதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் திரு. தில்லைநாதன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"கால்நடை வளர்ப்போர்க்கென அரசாங்கம் இலங்கை வங்கியூடாக கடன் வழங்குவதற்கான விசேட திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. இத்திட்டம் யாழ். மாவட்டத்தில் அண்மையில் பரீட்சார்த்தமான முறையில் செயற்படுத்தப்பட்டுவருகிறது.

இவ் விசேஷ திட்டத்தினுல் தலா இரு பசுமாடுகளை வளர்க்கும் ஒருவர் 5,000 ரூபாவரை கடன்பெற முடியும். இதற்கான வட்டி ஒன்பதரை வீதமாகும். இக்கடனைப்பெற விண்ணப்பிப்பவர்கள் தமது பகுதி கால் நடைவைத்திய அதிகாரியின் சிபார்சினைப் பெற்றுக்கொள்வதுடன் மாதாந்தம் 600 ரூபாவிற்கு மேல் வருமானம் பெறும் இரண்டு பாற்பண்ணையாளர்களது பிணையையும் பெற்றுக் கொள்ள வேண்டும். கடனைப் பெற்றுக்கொள்பவர்கள் 60 மாத கால எல்லைக்குள் தமது கடனைத் திருப்பிச் செலுத்தலாம்.

யாழ். மாவட்டத்தில் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ்விசேஷ கடன்வழங்கும் திட்டத்தின் கீழ் இம் மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு உதவி அரசாங்கஅதிபர்பிரிவில் இருந்தும் தலா பத்துப்பேர் பயனடையவுள்ளனர் ஆனல் கிளிநொச்சிப்பகுதியில் மாத்திரம் 25 பேர் கடன்பெற முடியும் என்ருர்.

யாழ்.மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திரு.எஸ் சிவதாஸன், நெல்லியடி மத்தியமகாவித்தியாலய அதிபர் திரு.கே. குணரத்தினம் உட்படப்பலர் பேசினர்கள். [அ]

## உடை தயாரிப்பு நிலையம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் உடை தயாரிப்பு நிலையத்தை சீ-சின் அபிவிருத்தி நிறுவனம் என்னும் தனியார் நிறுவனம் ஒன்று ஒப்பந்த அடிப்படையில் ஜூலை மாதம் தொடக்கம் பொறுப்பேற்கவுள்ளது ஆரம்பத்தில் இந்த நிலயத்தில் சுமார் 30 ஆயிரம் தைத்த சேர்ட்டுகள், சிறுவர்ஆடைகள் ஆகியன தயாரிக்கப்பட்டு மலேசியா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் என்றும், பலயுவதிகளுக்கு இந்நிலையத்தில் வேலைவாய்ப்புகளைப் பெற சந்தர்ப்பம் அளிக்கப்படும் என்றும் இந்நிறுவன நிர்வாக இயக்குநர் திரு. க ஜெயரத்தினம் தெரிவித்தார்.

## வார்ஸாவில் ஆசியா கழகம்

வார்ஸா, ஜூ,13

இங்குள்ள பழைய நகர் ஒன்றின் கட்டடங்களில் 'ஆசியா கிளப்' ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட உள்ளது ஆசியப் பத்திரிகைகள் பகுதி, ஆசியத்திரைபபட அரங்கு, ஆசியாவின் பல பகுதியிலிருந்து வருபவர்களது சந்திப்புக்கான பகுதிபோன்றவை இந்தக 'கிளப்'பில் இருக்கும். அதுமட்டுமன்றி கீழைத்தேய உணவு வகைளும் இக்கிளப்பில் கிடைக்கும்

வார்ஸாவைச் சேர்ந்த 5000 பேர் மாணவர்களாகவும் வேலைசெய்பவர்களாகவும், நீண்ட பயணங்களை மேற்கொள்பவர்களாசவும் ஆசியாவில் தங்கியுள்ளனர். கீழைத்தேச கலாசாரததை கறக வேண்டுமென்ற ஆர்வமும் வார்ஸா மக்களிடையே பெருமளவு அதிகரித்துள்ளது. இவற்றுக்காகவே 'ஆசியா கிளப்' உருவாகியுள்ளது

## அமெரிக்க-தாய்வான்உறவு

### பீக்கிங் அதிருப்தி

ஹாங்காங், ஜூன் 13

அமெரிக்க உப-ஜனுதிபதி திரு, ஜோர்ஜ் புஷ் பீக்கிங்கிற்கு விஜயம் செய்தபோது தாய்வான்-வாஷிங்டன் உறவுகளை முறித்துக்கொண்டு பீக்கிங்குடன்ராணுவஅரசியல் தொடர்புகளை பலப்படுத்திக் கொள்ள அமெரிக்கா முன்வர வேண்டுமென்று விடுக்கப்பட்ட கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படவில்லை எனத் தெரியவருகிறது.

சீன விஜயத்தை முடித்துக் கொண்டு திரு புஷ் அமெரிக்கா திரும்பியதும், தாய்வானுக்கு 6 கோடி டாலர் ராணுவத் தளபாடங்களை விற்பதை காங்கிரஸ்சபை அங்கீகரித்துள்ள அதே நேரத்தில் ஆளு குடியரசுக் கட்சியின் செனட்சபைத்தலைவர் திரு. ஹோவர்ட் பேக்கர் சீனவுக்கு விஜயம் மே கொண்டு அமெரிக்க-சீன உறவுகளை சகஜநிலைக்குச் கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

திரு ஜோர்ஜ்புஷ் சீனவில் 1974-75ல் அமெரிக்கப் பிரதிநிதியாக கடமையாற்றியவர். திரு ஹோவர்ட் பேக்கர், ஜனுதிபதி கார்ட்டர் நிர்வாகத்தின்போது 1978ல் அமெரிக்க—தாய்வான் பரஸ்பர பாதுகாபபு ஒப்பந்தத்தை அமெரிக்கா ரத்துசெய்யக் கூடாதென்று கோரியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# "அகதிகளான மலையகத் தமிழரிடையே விடுதலை உணர்வைக் காண்கின்றேம்"

## வவனியா எம். பி. கூறுகிருர்

[வவனியா]

"மலையகத் தமிழ்ப் பேசும் மக்களை அரசியல் சதுரங்க மேடையிலே பகடக்காயாக வைத்து ஆடிய சகாப்தம் இன்று மாறிவிட்டது பரம்பரையாக உழைத்துக்கொடுத்து தமது சொத்துச் சுகஙகள் அத்தனையும் இழந்து தமிழ்ப் பேசும் மககள் மத்தியில் குடியேறி வாழ்கின்ற. மலையகத் தமிழர் நல்ல அனுபவங்களைப் பெறறிருக்கின்ருாகள். இவர்கள் உள்ளங்களிலே விடுதலை உணர்வு பகவும்விறுவிறுப்பாக இருப்பதை நாம் காணுகின்றோம்."

இவ்வாறு வவனியா எம். பி. திரு. தா. சிவசிதப்பரம் வவனியா கந்தசாமி நகரில் உருவாக்கப்படவிருக்கு விஞயகர் ஆலய அடிக்கல் நாட்டு விழாவில் பேசுகையில் கூறினுர்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

"மலையகத்திலிருந்து 1977ம் ஆண்டு இனக்கலவரத்தின் போது வவனியா மாவட்டத்தில் வந்து குடியேறியமலையகக் குடும்பங்களின் எண்ணிக்கை ஏறக்குறைய 3200 என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

"1980-ம் ஆண்டு சித்திரை மாதம் வரை அரசாங்கக்காணிகளில் அத்துமீறிக் குடியேறியவர்களின்விபரங்கள்ஒவ்வொரு மாவட்டத்திலும் காணி இலாகாவினுல் சேகரிக்கப்பட்டுள்ளது.

"இந்த 3200 மலையகக் குடும்பங்களில் பிரஜா உரிமையற்றவர்களுச்கு காணி உத்தரவுப் பத்திரம்வழங்கப்பட்டுவருகின்றது. பிரஜா உரிமை கைவசம் இல்லாதவர்களுக்கு தற்போது உத்தரவுப்பத்திரம் வழங்கப்படவில்லை. இதனுல் தாங்கள் வெட்டித் திருத்திய காணியை இழக்க நேரிடுமோ என்றஐயம் இவர்களிடையே உருவாகியுள்ளது" என்ருர்.

### உதவி அரச அதிபர்

# திடீர் கண்காணிப்பில் கி. சே. அலுவலர் சிக்கினர்!

(கரவெட்டி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கிராம சேவைஅலுவலர் அலுவலகங்களுக்கு மேற்கொண்ட திடீர் கண்காணிப்பில் கரவெட்டிப் பகுதியில் கடமையாற்றும் இரு கிராம சேவை அலுவலர்கள் சிக்கிக் கொண்டனர்.

கரவெட்டி உதவி அரசாங்க அதிபரின் இத்திடீர் பரிசோதனையின்போது பிரஸ்தாப இரு கிராம சேவை அலுவலர்களும் தமது அலுவலகங்களில் காணப்படாதது கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து இவ் இரு கிராம சேவை அலுவலர்களிடமிருந்தும்விளக்கம் கோரப்பட்டுள்ளது.

## திருஇருதயக் கல்லூரிததினம்

[கரவெட்டி]

கரவெட்டி திருஇருதயக் கல்லூரியின் வருடாந்த கல்லூரித்தினம் இம்மாதம் 18ம் திகதி வெள்ளிக்கிழமை கொண்டாடப்படுகிறது.

அன்றையதினம் கல்லூரியில் திருப்பலிபூசை ஒப்புக்கொடுக்கப்படுவதுடன், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். [அ]

### மணிவாக்கு

அறமே ஆற்றல் என்பதை நம்புவோமாக. அந்த நம்பிக்கையில் நாம் அறிந்த கடமையைச் செய்யத் துணிவோமாக.

—ஆபிரகாம் லிங்கன்

# நமது நோக்கு

## "பணம் வந்து சேரவில்லை"

யாழ்ப்பாணத்துக்கு முதல் அவசியமானது, தண்ணீரா அல்லது தண்ணீர் அபிவிருத்திக் கருத்தரங்கா?

தண்ணீர்த் தட்டுப்பாட்டில் தத்தளிக்கும் யாழ். மாநகரசபை, மேலதிகம் ஒரு லட்சம் கலன் நீரைப் பெற ஏழு லட்சத்து எழுபத்தொன்பதாயிரம் ரூபா அரசின் வேண்டுதலுக்கமைய வைப்பிலிட்டது. 1978-ம் ஆண்டு தொட்டு தண்ணீர்த் தட்டுப்பாடு அதிகரித்து வருகிறது. எனினும் நீர் இன்று வரை கிடைக்கவில்லை.

இதற்குப் பதிலாகக் கிடைத்த நீர் அபிவிருத்திக் கருத்தரங்கில் யாழ்.மாநகர முதல்வர் வெளியிட்ட தகவல் இது. பிரதமருக்கு முறையிட்டும், அவர் கட்டளையிட்டும், நீர் வழங்கல் சபை நீர் வழங்க ஆர்வம் இருந்தும், அதற்கப்பால் உள்ள சக்திகள் முட்டுக்கட்டையாக விருப்பது பெரும் துர்ப்பாக்கியம் என்கிறார் நகர முதல்வர் விசுவநாதன்.

இதேபோன்று யாழ்.பெரியாஸ்பத்திரியில் மூன்று மாடிக் கட்டிடத்திற்கு இரண்டரைக் கோடி ரூபாவை அபிவிருத்திசபை மூலம் ஒதுக்கியபோதும், அப்பணம் வந்துசேரவில்லை என்ற முறைப்பாட்டை யாழ்.மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் அண்மையில் நடைபெற்ற ஆஸ்பத்திரி வைபவத்தில் வெளியிட்டிருந்தார்.

இவ்வித நிர்வாக முட்டுக்கட்டைகள் கொழும்பு - யாழ்ப்பாணப் பாதையில் தான் உண்டோ என்பது சந்தேகம்; வேறு இடர்கள் இப்பாதையில் உண்டென்பது தெளிவு.

அரசாங்கத்தை ஆதரிக்கும் தமிழ் அமைச்சர்களின் கிழக்கு மாகாணத்தைப் புறக்கணித்து, அதனை எதிர்க்கும் வடக்கிலேயே ஜனாதிபதி கவனம் செலுத்துவதாக இன்னொரு முறைப்பாட்டைப் படித்திருக்கிறோம்.

எவரும் மறுக்கமுடியாத உண்மை ஒன்று இதில் வெளிவருவது நாம் கவனிக்கத் தக்கது; மேல் மட்டத்தில் உள்ள அரசின் தலைவர்கள்— ஜனாதிபதி தொடக்கம், — இரண்டொருவரைத் தவிர அமைச்சர்கள், பெருமனம் படைத்த அமைச்சின் செயலாளர்கள் எல்லோரும் அனுவசிய பாகுபாட்டில் நம்பிக்கையற்றவர்கள்; அரசின் சிறந்ததிட்டங்களுக்கு— எப்பகுதியிலாயினும்— ஆக்கபூர்வமான செயலாற்றல் வழங்கவேண்டுமென்ற நம்பிக்கை கொண்டவர்கள்.

ஆயினும் இடைநடுவிலும் கீழ்மட்டத்திலும்உள்ள நிர்வாக அதிகாரிகள் வேண்டுமென்றே பல அரசியல் திட்டங்களின் அவசிய நிதுடைத்த்டங்கல் செய்யும் மனப்பாங்குடையவர்கள்; வகுப்புவாதம் மட்டுமல்ல, கட்சிவாதம், கோஷ்டிவாதம், பிடிவாதம் போன்ற பல வாதங்களால் பீடிக்கப்பட்ட நிர்வாகம், ஆசாரி விடை கொடுத்தாலும் பூசாரி தடை செய்வது போல், இவ்வித கொடுமையில் ஈடுபடுவது பகிரங்க ரகசியம்.

நாம் குறிப்பிட்ட யாழ். ஆஸ்பத்திரி வைபவத்துக்கு பிரதம அதிதியாக வந்தவர் யாழ். மக்கள் நண்பன், திருகோணமலை அரசாங்க அதிபர் திரு லயனல் பெர்ணண்டோ (Lionel Fernando). அவருடைய நிர்வாகத்தில், ஆஸ்பத்திரிக்கு ஒரு 'லிப்ட்' அமைப்பதற்கு யாழ். கச்சேரியிலிருந்து ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபா ஒதுக்கிக் கொடுத்தாரென்றால் இலங்கை அரசின் நிர்வாகம் துரிதப்படுவதற்கு எத்தனை லயனல்கள தேவை? இந்த விடையில் நாட்டின் விமோசனம் உண்டு.

அரசாங்க அதிபர் மக்களின் சேவகர்; சேவகர் என்றால் காப்பது மட்டுமல்ல, அழிப்பதிலும் வல்லவனுக இருக்கவேண்டும்; சோம்பல், சூழ்ச்சி, ஊழல் போன்றவை அழிப்பதிலும் லயனல் ஒரு 'புலி'. இவ்வித நிர்வாக மேதைகளுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து, வவனியாவிற்கு அல்லது திருகோணமலைக்கு உத்தியோக 'உயர்ச்சி' வழங்கும் அரசிடமிருந்து பணம் எப்படி வந்துசேரும்?

# கைதடி ஆயுள் வேத ஆஸ்பத்திரியை மூடும் அபாயத்தைத் தவிர்ப்போம்

யாழ்ப்பாணம் கண்டி வீதியில்உள்ள ஆயுள்வேத ஆஸ்பத்திரிக்கு சென்றேன் அங்கு உள்நோயாளர் குறைவாக இருப்பதையும் வெளி நோயாளர் பிரிவில் மிகவும் குறைந்தளவே நோயாளர்கள் வருவதை அவதானிக்கமுடிந்தது பல லட்சக்கணக்கில் செலவுசெய்து பல வாட்டுகளையும் நவீன வசதிகளையும் கொண்டுள்ள இந்த ஆஸ்பத்திரியை நம் யாழ்ப்பாணத்து மக்கள் அலட்சியம் செய்கின்றனர் போலும் அரசாங்கம் எமக்குத்தரும்இலவசமருந்தை நம்மக்கள் பாவிக்கமுடியவில்லை எனின் அந்த ஆஸ்பத்திரி நிச்சயம் மூடவேண்டி வரும் என்பது நிச்சயம்.

கிட்டத்தட்ட 30 தொழிலாளரும் தாதிமாரும் 3 டாக்டர்களும் மற்றும் உதவியாளர்களும் நோயாளிவருகைதராததால் சோம்பலாகவே உள்ளனர். நம்மாகாணத்தில் உள்ள ஒரேஆயுர்வேதஆஸ்பத்திரிக்கு ஏன் இந்த நிலை.

கடந்தகாலங்களில் மருந்து குறைவாகக்கொடுக்கப்பட்டதும் மருந்து தட்டுப்பாடும் சில மேல்மட்ட உத்தியோகத்தர்களின் போட்டிப்பூசலும்தான் நோயாளர் வருகைகுறைவாயிருக்கக்காரணம் எனத்தெரிய வந்தது. இந்த ஆஸ்பத்திரியை மூடவிடாமல் நல்ல நிலையில் நடத்தவேண்டும் என்ற நோக்கத்துடன் கொழும்பில்இருந்து வந்த வைத்திய அதிகாரி டாக்டர் ஜி. பி. பியதாசாவுடனும் மற்றும் ஊழியர்களுடனும் கலந்துரையாடி நிறைகுறைகளை அறிந்தேன்.

நவீனவசதியுடனும் மருந்து நிறைவுகளோடும் உடனடி மருந்து தயாரிக்கத் தயாரிப்புச்சாதனங்களும் மருந்துகளும் ஆயத்தமாகவே இருந்தும் சுமார் 150 பேர் தங்கி இருந்து வைத்தியம் செய்யவும் நவீனசமையல் கூட வசதியும் இருந்தும் இந்தஆஸ்பத்திரிக்கு இந்நிலை ஏற்பட்டுள்ளது விசனத்திற்குரியது சாதிமதபேதமில்லாமல் நோயாளிகளை கவனிக்கும்தொழிலாளர்களைக் கொண்டு நிறைவாக விளங்குகிறது இந்த ஆஸ்பத்தி.

கைதடி ஆயுள்வேத ஆஸ்பத்திரியைத் திறம்பட நடத்துவதற்குப் பொதுமக்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் கோருகிறார் புதிதாகப் பதவி ஏற்றிருக்கும் பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் ஜி. பி.ஜி. பியதாசா.

பிரதமவைத்திய அதிகாரி என்னுடன்பேசுகையில் தெரிவித்த கருத்தை இங்கு அப்படியே தருகின்றோம்.

"அ[illegible] பலலட்ச ரூபா செலவுசெய்து உங்கள் மாகாணத்தில் கட்டப்பட்ட இந்த ஆஸ்பத்திரி உங்களுடையதே. நான் இங்கு இந்த மாதம் முதலாம்திகதியில் இருந்து உங்களுக்குச் சேவை செய்ய வந்துள்ளேன். அதற்கு உங்களின் பூரண ஒத்துழைப்புத்தேவை. இங்கு வந்தவுடன் எனக்குக்கிடைக்கப்பெற்ற தகவல்களைக்கொண்டு பலதுறை நிறைகளை நோயாளரிடமும் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் சகஊழியர்களிடமும் கவனமாக விசாரித்து அறிந்தேன். நாங்கள் எந்தவித சாதிசமத குலபேதம் இன்றி உங்களுக்குக் கடமைசெய்யக் காத்து இருக்கிறேம் இந்தவருட முற்பகுதியில் மருந்து குறைபாடு சிறிது இருந்தது. அதை நிவர்த்தி செய்யும் வகையில் மிகவும் செதியாக மருந்துகிடைக்கும் வழிவகைகள் செய்துள்ளேன். அத்துடன் எமது பாகசாலையில் உடனுக்குடன் மருந்துசெய்ய

(5-ம் பக்கம் பார்க்க)

**டாக்டர் கே. சி. தம்பிஐயா காசிநாதன்**

## சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி

விடுதலை இயக்கங்கள் வீறு கொண்ட உலகில் 'சேர்' பட்டம்பெற்ற ஒருவரைச் சந்தேகிப்பதும், அவர் அரசின் கீழ்ப்படிவான பெரியோர் என்று கொள்வதும் இயல்பு.

பிரிட்டிஷ் அரசின் சாமர்த்தியம் என்னவென்றால் ஆட்சியை எதிர்த்து ஒரு பெருமையான சாதனை இயற்றிய பெரியோருக்கும் இந்த 'நைற்' (Knight) பட்டம் வழங்குவதிலும் நம்பிக்கை கொண்டிருப்பது.

1915ல் நடைபெற்ற இனக்கலவரத்தில் ராணுவ ஆட்சியின் கொடுமையால் சிங்களத் தலைவர்கள் சிறைக்குள் அடைபட்டிருக்கையில், சேர் பொன்னம்பலம் இராமநாதன், உலக யுத்த அபாயத்தை பொருட்படுத்தாமல் லண்டன் சென்று இங்கு கொடுங்கோல் செலுத்திய கவர்னரைப் பதவிநீக்கம் செய்வித்தார். எந்த அதிகாரப் பித்துப்பிடித்த தேசாதிபதியையும் எதிர்த்துப் போராட அவர் தயங்கவில்லை. பிரிட்டிஷ் ஆட்சியாளரால்கௌரவிக்கப்படத் தவறவில்லை.

இன்று அரசாங்கத்தால் நினைவுமுத்திரை வெளியிட்டுக் கௌரவிக்கப்படும் சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி அந்த வழியில் வந்த இந்தப் பெருமைக்குரியவர் என்பதை இங்கு வாழும் எல்லாச் சமூகங்களும் ஒப்புக் கொள்ளும்.

"நாடு உண்மையில் அபாயநிலையில் காணப்பட்டால் நாமெல்லோரும் இராமநாதனுக்கே வாக்களிக்க வேண்டும்" என்று கூறியவர் சிங்களப்பெரும் தலைவர் சேர் ஜேம்ஸ்பீரிஸ்.

அந்தப் பரஸ்பர நம்பிக்கை சமூகங்களிடையே பலத்திருந்த காலத்தில் அரசியலில் ஈடுபட்ட சேர் வைத்திலிங்கம் இன்று 13 அங்கத்தவர் பிரதிநிதித்துவம் செய்கின்ற வடமாகாணம் முழுவதிற்கும் சட்டசபையின் தனிப்பிரதிநிதியாகப் பணிபுரிந்தார். 1936ம் ஆண்டு தொடக்கம் 1946 வரைக்கும் அரசாங்க சபையின் முதல்வராக நாட்டின் முதற்பிரஜையாக இருந்த கௌரவம் அவருடையதே! முதல்வருக்கு அவருடன் போட்டியிட்டவர் திரு. பிரான்ஸிஸ் டி ஸொயிசா K. C. என்றால் சிங்கள அங்கத்தவர்கள் எவ்வளவு ஆதரவு சேர் வைத்திலிங்கத்துக்கு அளித்தார் என்பது இலகுவில் புரியும்.

இனவிரோதம் எள்ளளவும் இல்லாத காலத்தில் முதல்வராகத் திறம்படச் சபையை நடத்திய சேர் வைத்திலிங்கம், இராமாயணத்திலும் மகாபாரதத்திலும் மேற்கோள்சாட்டி விவாதங்களை மின்னல் வேகத்தில் தீர்த்துவைக்கும் திறமையுடையவர்.

இன்று புதிய பாராளுமன்றத் திறப்புவிழாவில காணப்பட்ட சூழ்நிலை, நாம் மேற்கூறிய உண்மைகளை புராணக்கதையெனக் கொள்ள உதவும். மனப்பாங்கை ஏற்படுத்தவல்லது. புதிய பாராளுமன்ற வைபவத்தையொட்டி வெளியான இரண்டு ஆங்கில பத்திரிகைகளின் சிறப்பிதழ்களில் சேர் வைத்திலிங்கம் துரைசுவாமியைப்பற்றிய சாதனைகள் எதுவும் காண முடியவில்லை. இருபினும் அரசாங்கமாவது, முழுநாட்டுக்கும்தமிழ்சமூகத்துக்கும், சைவசமயத்துக்கும் பெருந்தொண்டாற்றிய பெரியவரை இன்றைக்காவது நினைவுகூர்வது நாட்டில் இன்று பரவிவரும் இருளில் ஒரு நம்பிக்கை ஒளி போலத் தோன்றுகிறது.

# மக்கள் கருத்து

## 'தர்மர்' விளக்கம்

'ஈழநாடு' 12-6-82 இதழில் தமிழ்ஈழப் பேராளிகளின் அஞ்சலிக் கூட்டத்தில் நான் உரையாற்றிய போது கீழ்க் கண்டவாறு கூறியதாகக்கூறப் பட்டுள்ளது.

"எமது இனத்தின் விடுதலைப்பாதையில் ஒரு அடி எடுத்துவைப்பதற்கு முன்னதாகவே எமது அணிக்குள் பிரிவினைகளும் கருத்து மோதல்களும் ஒரு தடையாக ஏற்பட்டு விட்டதே, இது துர் அதிஷ்டமானது".

இக்கூற்று ஒரு தப்பான கருத்தை ஏற்படுத்துகின்றது. நான் அக் கூட்டத்தில் கூறியது இதுதான்:-

"இவ்விரு கொலைகளும் (இறைகுமாரன் - உமைகுமாரன் தமிழ் இனத்தின் விடுதலைப்பாதையில் ஒரு அடியாவது முன்னெடுத்து வைப்பதற்கு உதவவில்லை. அதை விட்டு தேவையற்ற பிரசனைகளையும், பிரிவினைகளையும் கசப்புக்களையும் இக் கொலைகள் இளைஞர் மத்தியில் உருவாக்கியுள்ளது"

இதே செய்தியில் மற்றொரு பந்தியில் இறைகுமாரனின் கரைச்சல் தாங்கமுடியாமல் நான் பதவியாவில் காணி பெற்றுக்கொடுத்ததாகவும் கூறப்பட்டுள்ளது. நான் கூறியது யாதெனில் "இறைகுமாரன் தனது பெற்றோருக்கு சுமையாக இராமல் பதவியாயில் குடியேறவேண்டும் என்று தீர்மானித்து அங்கு திரு டேவிற்றின் பண்ணையில் சேர்ந்து உழைப்பதற்கு தீர்மானித்ததும் அவர்தான். அப்பொழுது அவருடைய தேக நிலையையொட்டி பதவியவுக்கு போகவேண்டாம் என்று தடுத்தேன். வன்னியின் எல்லைகளை காப்பாற்றுவது எங்களுடைய கடமைகளில் ஒன்று என்று கூறிப்பதவியாவுக்குச் சென்றார். பின்பு மலேரியாவுடன் திரும்பினார்."

**வி. தர்மலிங்கம்**

(பா. உ)
மானிப்பாய்.

## தேவன் கணவை பிள்ளையார் வரலாறும் வளர்ச்சியும்

ஊர்காவற்றுறை மேலைக் கரம்பொன் தேவன் கணவைப் பிள்ளையார் கோவிலின் வரலாறும் வளர்ச்சியும் பற்றி பகவான் ஸ்ரீ பாலசிவயோகேந்திர மகராஜ் விஸ்வகாந்தி தேஜ் அவர்களின் வாழ்க்கைச் சுருக்கமும் அற்புதங்களும் அடங்கிய நூல் நாளை செவ்வாய்க் கிழமை வெளியிடப்படவுள்ளது.

மேற்படி நூலை ஸ்ரீ பாலசிவசாவதேச சமாதான ஸ்தாபனத்தின் யாழ்ப்பாண கிளைச் செயலாளரான திரு. எஸ். ஐ. தனபாலசிங்கம் வெளியிடுகின்றார். சைவசித்தாந்தப் பொன்மொழிகள், பஜனை நாமாவளிகள், பக்தி மார்க்கம் என்பனவும் நூலில் சேர்க்கப்பட்டுள்ளன.

சுவாமிகளின் அற்புத நிகழ்ச்சிகள் பற்றி ஆந்திரப் பல்கலைக்கழகப் பதிவாளர்நாயகம் ஸ்ரீ எம். கோபால கிருஷ்ண ரெட்டியால் வெளியிடப்பட்ட ஆங்கில நூலை திரு. தனபாலசிங்கம் தமிழில் மொழிபெயர்த்து இந்நூலில் சேர்த்துள்ளார்.

'தேவன் கணவைப் பெரியோனே' எனும் தலைப்பில் கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளையின் நயமும் பக்தியும் சொட்டும் கவிதையும் இடம் பெற்றுள்ளது.

சமீபத்தில் கொழும்பில் நடைபெற்ற உலக இந்து மகாநாட்டில் கலந்துகொண்ட பகவான் ஸ்ரீ பாலசிவயோகேந்திர மகராஜ் விஸ்வசாந்தி தேஜ் பக்தர்களின் வேண்டுகோளுக்கமைய நடத்திய அற்புதச் சித்துக்கள் பற்றியும் நூலில் குறிப்பிட்டுள்ளது. பல சம்பவங்களில் ஒன்று கீழே தரப்படுகின்றது.

கொழும்பு ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் உள் வீதியில் அமைக்கப்பட்ட மேடையில் நல்லை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய ஸ்வாமிகள், ஸ்ரீ பாலசிவ யோகேந்திர மகராஜ் சுவாமிகள், மயான யோகியார் இன்னும் பல சுவாமிகள் அமர்ந்திருந்தனர். அப்போது அமைச்சர் இராசதுரை அவர்கள் உரை நிகழ்த்திய பின் ஏதோ முக்கிய அலுவலாகப் புறப்பட ஆயத்தமானார்.

(5ம் பக்கம் பார்க்க)

# பிரிட்டிஷ் படைகளின் இரவுநேர திடீர்த்தாக்குதல்!

லண்டன், ஜூன், 13

போக்லண்ட் தீவுகளின் தலைநகரையடுத்தள்ள பகுதிகளில் பிரிட்டிஷ் படைகள் நேற்றிரவு திடீர்த்தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக அறிவிக்ப்பட்டது.

பிரிட்டிஷ் துருப்புக்களின் இத்தாக்குதலையடுத்து 900 ஆர்ஜென்டீனா துருப்புக்கள் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டதாக ஆர்ஜென்டீனா தெரிவித்துள்ளது. இத்தாக்குதலில் பிரிட்டிஷ் கப்பலொன்று மூழ்கடிக்கப்பட்டதாகவும், அதிலிருந்த சிலர் உயிரிழந்ததாகவும் கூறப்பட்டது.

## பாப்பரசர் வேண்டுகோள்

ஆர்ஜென்டீனாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாப்பரசர் அருளப்பர் சின்னப்பர், பிரிட்டனும், ஆர்ஜென்டீனாவும் இப்பிரச்னைக்கு அமைதித் தீர்வு காணவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்துள்ளார். (வெ)

# அமெரிக்காவில் நடைபெற்ற மிகப்பெரிய ஆர்ப்பாட்ட ஊர்வலம்!

(வாஷிங்டன்)

அணு ஆயுத உற்பத்தியை எதிர்த்து அமெரிக்காவில் நேற்று 10 லட்சம் பேர் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தியதாக அறிவிக்கப்பட்டது.

இந்த ஊர்வலத்தில் ஜப்பான், மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ஐ. நா சபையின் அணு-ஆயுத உற்பத்திக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து ஐ நா ஸ்தாபனத்துக்கு முன்பாகவும் அணிவகுத்துச்சென்றனர்.

அமெரிக்காவில் இதுவரை இடம்பெறாத மிகப்பெரிய ஆர்ப்பாட்ட ஊர்வலமாக இது இருந்ததாகக் கூறப்படுகிறது.

இவ்வார்ப்பாட்டக் காரர்களுக்கு பணிந்து அமெரிக்கா தனது அணுஆயுத கொள்கையை மாற்றமாட்டாதென்று பாதுகாப்பு அமைச்சர் திரு. வைன் பேகர் தெரிவித்தார். [வெ]

# யுத்த நிறுத்தம் நீடிப்பு

பெய்ரூட், ஜூன் 13

இஸ்ரேலும், லெபனானும் இன்று இரண்டாவது நாளாக யுத்தநிறுத்தம் மேற்கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

அந்த யுத்த நிறுத்தத்திற்கு முன்னர் இஸ்ரேல் துருப்புக்கள் பெய்ரூட்டின் மேற்கு மலைப்பிரதேசத்திலும், ஜனாதிபதி மாளிகையிலும் தாக்குதல்களை நடத்தியதாகக் கூறப்பட்டது.

இஸ்ரேல் லெபனான் யுத்தத்தினால் சீர்குலைந்துள்ள தெற்கு லெபனான் பகுதியிலுள்ள போர்வீரர்களுக்கு தீவிரப் பணித்திட்டத்தின்கீழ் உணவு வசதிகளை வழங்க செஞ்சிலுவைச்சங்கம் தீர்மானித்துள்ளது. (வெ)

# அம்புலன்ஸ் வண்டி எங்கே?

(துணுக்காய்)

துணுக்காய், பாண்டியன் குளம், வவுனிக்குளம் பிரதேசத்தின் குடியேற்ற வதிவிட மக்களின் சுகாதார தேவையைப் பூர்த்திசெய்யும் ஒரே ஒரு அரசினர் வைத்தியசாலை மல்லாவி அரசினர் வைத்திய சாலையாகும். இப்பகுதி மக்களின் 10, 15 வருட நீண்ட நாட்கோரிக்கையாயிருந்த அம்புலன்ஸ் வண்டிச் சேவை மிக அண்மையில்தான் கிட்டியது.

எங்கேயோ இவ்வம்புலன்ஸ் வண்டி மறைந்துவிட்டது. இதனால் இப்பகுதி நோயாளர்கள் பெரும் அவலநிலையை எதிர் நோக்கியுள்ளனர். இந்த அம்புலன்ஸ் வண்டிச் சேவை பல வருடங்களாக இங்கு இல்லாமையால் இப்பகுதி மக்களின் உயிர்கள் பறிபோயின.

# "புங்குடுதீவின் இருகண்கள்"

## கனகசபைக்கும் சிவானந்தனுக்கும் பொன்னாடை போர்த்தி பாராட்டு

(புங்குடுதீவு)

"சிவநெறியின் சீர்மையினைச் சித்தாந்த நோக்கில் சாத்திரப் பார்வையும் தோத்திரப் பார்வையும் நிரம்ப மக்களுக்கு விளங்கவைப்பதில் புலமைமிக்க வித்துவான் பொன். அ. கனகசபையும் புலவர் ஈழத்துச் சிவானந்தனும் சைவ உலகைப் பொறுத்தவரை புங்குடுதீவின் இரு கண்கள்."

மேற்கண்டவாறு புங்குடுதீவு இருபிட்டி பெரியபுலம் வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் பத்து நாட்களாகத் தொடர் விரிவுரைகள் நிகழ்த்திய வித்துவான் பொன். அ. கனகசபைக்கும் புலவர் ஈழத்துச் சிவானந்தனுக்கும் பொன்னாடை போர்த்திச் சௌரவித்த விழாவில் மகோற்சவ குரு ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள் கூறினார்.

ஆலய பரிபாலனசபைத்தலைவர் திரு பெ. அம்பலவாணர் வித்துவான் கனகசபைக்கும் பரிபாலனசபைச் செயலாளர் அதிபர் கா. கனகசுந்தரம், புலவர் சிவானந்தனுக்கும் பொன்னாடை போர்த்தினர்கள். முதியவரான வித்துவானும் இளையவரான புலவரும் நமது நாட்டில் தமிழுக்கும் சைவத்திற்கும் எழுத்தாலும் பேச்சாலும் செய்துவரும் தொண்டுகளால் ஒரு தலைமுறையின் எதிர்கால வாழ்வு நன்னெறியில் திருப்பிவிடப் படுகின்றது.

சமய விருப்பினையும் தெளிவினையும் விளக்கவுரைகளால் விரித்துக்கூறி இன்றைய உலகியல் வாழ்க்கைக்கும் நாளைய மறுமை வாழ்வுக்கும் விழுமிய ஒழுங்குகளை வழிப்படுத்தும் வித்துவானையும் புலவரையும் நாம் போற்றிப் பாராட்டுவது நமது சமய வளர்ச்சிக்கு ஒரு தூண்டுகோலாகும் என அதிபர் கா. கனகசுந்தரம் தமது பாராட்டுரையின்போது குறிப்பிட்டார்.

## தேவன்...

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

உடனே ஸ்ரீ பாலசிவயோகேந்திர மகராஜ் சுவாமிகள் அமைச்சரை நோக்கி "நான் நன்றி சொல்ல வேண்டும்" எனக் கூறிக்கொண்டு தமது கை அசைவினால் வெள்ளியிலான பிள்ளையார் சிலைஒன்றை வரவழைத்துக் கொடுக்க அதனை அமைச்சர் தனது வெள்ளைக் கைக்குட்டையில் பெற்றுக் கொள்ள, சுவாமிகள் விபூதி வரவழைத்துக் கொடுத்தார். அமைச்சர் ஆனந்தக் கண்ணீர் மல்க கண்களில் ஒற்றிக் கொண்டு சுவாமிகளிடம் இருந்துவிடைபெற்றுக்கொண்டார்"

அழகிய படங்களுடன்நேர்த்தியான அமைப்பில் வெளியிடப்பட்ட இச் சிறு நூலில் விநாயகர் திருவுருவ மகிமை குறித்து சைவப் புலவர் திருவை இராமகிருஷ்ண ஐயரும் தேவன் கணவைப் பிள்ளையார் தல மகாத்மியம்பற்றிப்பொறியியலாளர் திரு த தயாபரனும் எழுதியுள்ளார்கள்.

-- ஆதிரை

# விமான விபத்து: 44 பேர் பலி!

லண்டன், ஜூன் 13

பிரேஸிலில் இடம்பெற்ற விமான விபத்தொன்றில் 44 பேர் பலியானதாக அறிவிக்கப்பட்டது.

பெரு — கொலம்பியா நாட்டு எல்லையிலுள்ள மிகப் பெரிய கோபுரமொன்றின்மீது இவ்விமானம் மோதியபோதே விபத்து இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. (வெ)

# "இந்திய சிற்பாசாரிகளுக்கு நிகரானவர் ஈழத்திலும் இருக்கின்றனர்"

(சித்தன்கேணி)

"இந்திய சிற்பாசாரிகளுக்கு நிகரான சிற்பாசாரியர்கள் ஈழநாட்டிலும் இருக்கின்றனர் என்பதை எமது கோவில்எடுத்துக் காட்டுகின்றது. சிற்பாசாரியார் திரு. செந்தூர்ராசா எமது கோவிலில் அமைத்த சிற்பங்கள் அருள்சுரக்கும் கலைப்படைப்பாகஅமைந்திருக்கின்றன. இவரின் கலைத் திறமையைப் பாராட்டும் முகமாகவே பட்டமளிப்பு விழா நடாத்துகின்றோம். இவரை வாழ்த்தி 'சிற்ப சிகாமணி' என்னும் பட்டத்தைச் சூட்டிக் கொள்கின்றேன்"

இளவாலை அருள்மிகு ஒல்லுடை ஞான வைரவர் கோவில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் நடைபெற்றபோது மேற்படி ஆலயத்தை அமைத்த சித்தன்கேணி கலைநகரைச் சேர்ந்த சிற்பாசாரி சீனிவாசகம் செந்தூர்ராசாவுக்கு 'சிற்பசிகாமணி' என்னும் பட்டமளித்து பாராட்டுப்பத்திரம் வழங்கிக் கௌரவித்த கோவில் பரிபாலன சபைத் தலைவர் திரு சி. கார்த்திகேசு மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வைபவத்தில் கோவில் பரிபாலனசபை பொருளாளர் திரு க. இ வேலுப்பிள்ளை 'சிற்பசிகாமணி' செந்தூர்ராசாவுக்கு பொன்னாடைபோர்த்திக் கௌரவித்தார்.

திரு சி. கார்த்திகேசு தொடர்ந்து பேசுகையில் "இந்தியாவிலிருந்து சிற்பாசாரியர்களை இங்கு வரவழைத்து கோவில் கட்ட வேண்டிய அவசியம் இனிமேல் எமக்கு ஏற்படாதென்றே நம்புகின்றேன். எமது நாட்டிலும் சிற்பாசாரியர்கள் இருக்கின்றனர். சிற்பசிகாமணி என்னும் பட்டத்தைப் பெறும் செந்தூர்ராசா இந்திய சிற்பாசாரியர்களுக்கு நிகரானவர். "இவர் எமது ஆலயத்தில் அமைந்திருக்கும் கலைவண்ணம் நிறைந்த சிற்பங்கள் இவரது சிறப்பிற்கு எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. கலைநகர் தந்த சிற்பசிகாமணி செந்தூர்ராசா பண்பு வாய்ந்தவர், தெய்வ அருள் பெற்றவர்"என்றார்.

## கைதடி...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

வும் ஒழுங்கு செய்துள்ளேன். புதிய நிர்வாகத்தின்கீழ் புதிய முறையில் ஆஸ்பத்திரியை மேலும் முன்னுக்குக்கொண்டு வர நாம் எல்லாரும் ஆயத்தமாக இருக்கிறோம். இந்த ஆஸ்பத்திரி உங்ளுக்காகவே கட்டப்பட்டது நானும் எனது சகோதர ஊழியர்களும் உங்களுக்கு எந்த நேரத்திலும் திறமையக் கடமைசெய்யக் காத்திருக்கிறோம் உங்களின் பூரண ஒத்துழைப்பை எங்களுக்குத்தந்து உங்களுக்குக் கடமைசெய்யச் சந்தர்ப்பம் தாருங்கள் எங்கள் வெளிநோயாளர் பிரிவும் வாட்டு சேவைப் பிரிவும் உங்களை நோயினின்றும் பூரணமாக விடுவிக்கக் காத்திருக்கின்றன.

இவ்வாறான சேவை மனப்பான்மையுடன் பேதமில்லாமல் பல அரிய மருந்துகளோடும் படுக்கை வசதிகளைக் கொண்டும் நமக்குச் சேவை செய்யக் காத்திருக்கிறார்கள் கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை டாச்டர்களு சக ஊழியர்களும் நமக்காகக் கட்டப்பட்டு பல மருந்துகளுடன் உள்ள இலவச ஆயுள்வேத வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சைபெற நாம் ஏன் பின் நிற்கவேண்டும்?

## மன்னார்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

கே. கே சாகுல் ஹமீது எருக்கலம்பிட்டி, திரு. எலியாஸ் பிள்ளை அடம்பன், திரு. சம்பாய்வ கற்கடந்த குளம், ஜனுப் பலூலுன் மரைகாயர் சிலாவத்துறை ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

## கல்விச்சுற்றுலா

(துணுக்காய்)

விஸ்வமடு றெட்பானா அரசினர் தமிழ்கலவன் பாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும் கிளிநொச்சித் தொகுதியிலுள்ள பல இடங்களையும் பார்வையிட இருக்கின்றார்கள். இக்கல்விச் சுற்றுலாவில் கிளிநொச்சி இரணைமடுக்குளம், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, விசுவமடு றெட்பானா அபிவிருத்தி கைத்தொழில் நிலையங்கள், மற்றும் விவசாயப்பண்ணைகள் திட்டங்களையும் இவர்கள் பார்வையிடுவார்கள். இச்சுற்றுலாவை ஆசிரியர் திரு, இ. ஜெயரத்தின சிங்கம் வழி நடத்துவார்.


ஒரு முறை தவணைப்பணத்தை செலுத்துங்கள், தங்க ஆபரணங்கள் உங்கள் உடமையாகும்! இன்று முதல் மாதாந்தத் தவணைத் திட்டத்தில்



தங்கம் வாங்குங்கள்

உங்களுக்குத் தேவையான எல்லாப் பவுண் நகைகளையும் நியாயமான விலையில் வாங்கி மாதாந்தத் தவணை முறையில் பணத்தைச் செலுத்துங்கள்.

உங்கள் நம்பிக்கையான நகை வியாபாரிகளிடம் தேவையான ஆபரணங்களைத் தெரிவு செய்யுங்கள்.

ஒரு ஆரம்ப தவணைப் பணத்துடன் அந்தத் தங்க நகைகளை உங்களுடையதாக்க நாம் உதவி செய்வோம்.

கவர்ச்சிகரமான தவணைத்திட்டத்தின் விபரங்களை அறிய எம்மைக் காணுங்கள்.

TFC

த பினான்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7680

## சிறுவிபத்து:
## 3ம் கட்டப் பிரிவில்
# இருவர் காயம்

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை 3ம் கட்டடப் பிரிவில் இயங்கிய பாரந்தூக்கி ஒன்று பாரமான உதிரிப்பாகம் ஒன்றை மேலே உயர்த்தும் போது எதிர்பாராத விதமாக உடைந்து விபத்திற்குள்ளானது. இதில் இருதொழிலாளர்களும் காயத்திற்குள்ளாகினர்.

மேற்படி 3ம் கட்டப்பிரிவில் தற்போது இயந்திர உதிரிப்பாகங்களை இணைக்கும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மிகவும் பாரமான உதிரிப்பாகங்களை உயரத்திற்கு எடுத்துச் சென்று அங்கு பூட்டுவதற்காக சுமார் 150 அடி உயரமான பாரந்தூக்கி ஒன்று இப்பிரிவில் இயங்கி வந்தது.

இப்பாரந்தூக்கி மிகவும் பாரமான உதிரிப்பாகம் ஒன்றை மேலே தூக்கிய சமயம் எதிர்பாராத விதமாக உடைந்து விபத்திற்குள்ளானது உடனே தொழிலாளர்கள் அவலக்குரல் எழுப்பவே சகல தொழிலாளர்களும் அங்கு கூடிவிட்டனர். இரு தொழிலாளர்களுக்கும் காயங்கள் ஏற்பட்டதைத் தவிர பெரிய சேதம் எதுவும் ஏற்படவில்லை. [அ]

## மூளைக்காய்ச்சல்

(மன்னார்)

மன்னார் பகுதியில் மூளைக் [illegible] பரவி வருகிறது. மன்னார் தேவாடரம் கிராமத்தில் மட்டும் 7பேர் மூளைக் காய்ச்சல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மூளைக்காய்ச்சல் நோய் மீண்டும்பரவாதிருக்க மன்னார் மாவட்ட மலேரியா தடுப்பு இயக்க அதிகாரி திரு.மிகிராசா தலைமையிலான சுகாதாரக் குழு நோய் தடுப்பு நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

## இராசையா குடும்பத்திற்கு நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு காங்கேசன்துறை கொழும்பு தபால் புகையிரதப் பெட்டியில் குண்டுப்பார்சல் வெடித்து இறந்த தபால் அதிபர் திரு. பொன்னு இராசையாவின் குடும்பத்துக்கு இலங்கை அஞ்சல் தொலைத்தொடர்பு உத்தியோகத்தர் சங்கம் நிதி உதவி வழங்க முடிவு செய்துள்ளது.

மேற்படி சங்கத் தலைவர் திரு. எஸ். செல்லத்துரை, செயலாளர் திரு. எஸ். தங்கவேலாயுதம் உட்பட சங்க உறுப்பினர்கள் இராசையாவின் இறுதிச் சடங்கிலன்று மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். [மா-இ]

## சொக்கனின் 'நெடும்பா 3'

[யாழ்ப்பாணம்]

பாரதி நூற்றாண்டு நினைவு வெளியீடாக இம்மாத இறுதிப் பகுதியில் 'சொக்கன்' எழுதிய 'நெடும்பா– ' வெளியாகவிருக்கிறது புறநானூற்று வீரத்தாயின் வரலாறு கூறும் 'மலர்விழி, கடோபநிடதக்கதையான 'நசிகேதன்' கிரேக்கத்து இசைவாணன் வரலாறான 'ஓபியசு' என்பன இந்நூலில் இடம்பெறுகின்றன.

## ம. கிழக்கு வேலை: 15 பேரை சிபார்சு செய்யக்கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

மத்திய கிழக்கு நாடுகளுக்கு அரசாங்கத்தினால் இலங்கையருக்குவேலைவாய்ப்புப் பெற்றுக்கொடுக்கும் திட்டத்திற்கமைய ஒவ்வொரு தொகுதி எம். பிக்களுக்கும் 15 பேரை சிபார்சு செய்யும்படி கடிதங்கள் தொழில்அமைச்சால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. வடட்டுகுதி எம். பிக்களுக்கும் இக்கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மேற்படி கடிதத்தில் கணக்கு லிகிதர், சுருக்கெழுத்தாளர், மேசன், தச்சுத் தொழில் புரிவோர், எலக்ரீசியன், முகாரி, ஒட்டுநர் பெயின்டர் ஆகிய பதவிகட்கே சிபார்சு செய்யுமாறு கோரப்பட்டுள்ளதெனத் தெரிகிறது. (சி-இ)

## பாராட்டுபசாரம்

[மண்டைதீவு]

மண்டைதீவுக் கிராமோதய சபைத்தலைவர் திரு. நாகலிங்கம் இராசலிங்கத்துக்கு மண்டைதீவு விவசாய முன்னேற்றக்கழகம் பாராட்டுவைபவம் ஒன்றை மண்டைதீவு திலலேஸ்வரன் ஆலயத்தில் கழகத்தலைவர், திரு. மு. நவரத்தினராசா தலைமையில் நடாத்தியது.

இவ்வைபவத்தில் விசேட சேவை உத்தியோகத்தர் திரு. கு. சிவகுலசிங்கம், மண்டைதீவு கிழக்குக் கிராமஅபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. அ. சிறிபத்மராசா உட்படப் பலர் பேசினார்கள். [அ]


# பிரித்தானிய கொடிபோல அந்தநாட்டிற்கே முற்றிலும் உரித்தானது பிளன்டெல் பேர்மோகிளேஸ் பெயின்ட்.




GARADS

மிகமிக நம்பகமானது. எல்லாக் கால நிலைமைகளையும் தாக்குப்பிடிக்கிறது. உறுதியானது: சகலவித பாவனைக்கும் அலாதியானது.

பிளன்டெல் பேர்மோகிளேஸ் பெயின்ட்களை கூடுதலான இடப்பரப்பிற்குப் பயன்படுத்தலாம். இவை துரிதமாக உலர்பவை; அத்துடன் உங்கள் நேரத்தையும் சிரமத்தையும் பெருமளவு குறைக்கின்றன.

மேலும், இவை அதிக பளபளப்பானவை, பிரகாசமானவை, நீடித்துழைப்பவை.

பிரித்தானிய கைத்தொழிலில் நன்மதிப்புப் பெற்ற ஒரு பெயர் - பிளன்டெல் பேர்மோகிளேஸ்.

பிளன்டெல் பேர்மோகிளேஸ்
கட்டிடக்கலைஞரின் உறுதுணை

இமல்ஸன் (1 லிற்றா) ரூபா 46/-
இனமல் (500 மி.லிற்றர்) ரூபா 29/-

டெல்மேஜ் போசைத் அன்ட் கம்பெனி (பெயின்டஸ்) லிமிட்டெட்,
101, வினயாலங்கார மாவத்தை, கொழும்பு 10,
தொலைபேசி: 93367, 93361-5

வெஸ்லி மானிப்பாய்
17-6-82 வரை
தினசரி 6-15, 9-15
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர் - ஜெய்சித்ரா
வண்டிக்காரன் மகன்
[இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - பாரதி
உனக்கும் எனக்கும்
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

## இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற ஆராய்ச்சி அபிவிருத்திப்பிரிவில் கடமையாற்றிய திரு. வேலாயுதர் விவேகானந்தன் மன்றத்தின் நிலாவெளி பயிற்சி நிலையத்துக்குஇடமாற்றம் பெற்றுள்ளார்.

என்ற நூலகத்துக்குப் பொறுப்பாளராக விருந்த இளைஞர் சேவைஅதிகாரியான இவர், பேராதனைப்பல்கலைக்கழக புவியியல் சிறப்புப் பட்டதாரியாவார். (மா)

ராணி (யாழ். நகர்) தினசரி 5 காட்சிகள்
Force 10 From Navarone

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
லொறி ட்ரைவர் ராஜாக்கண்ணு

லிடோ (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்
ராஜபார்வை

சாந்தி (யாழ்நகர்) 10-30, 2-30, 6-15, 9-45
4-வது வெற்றி வாரம்

கமல் (இரட்டைவேடம்)
சுஜாதா, அம்பிகா,
சுவப்னா, தேங்காய்,
தங்கவேலு, நாகேஷ்.
கடல் மீன்கள்
—கலர்—

ராஜா [யாழ்ப்பாணம்] தினசரி 4காட்சிகள்
தொடர்ந்து ''ஹவுஸ்புல்'' காட்சிகளாக
ரஜனிகாந் சுஜாதா விஜயன்
கராத்தே மணி ரதி
அன்புக்கு நான் அடிமை
[ஈஸ்மன் கலர்]

மனோகரா (யாழ்ப்பாணம்)
வெற்றி முரசுகொட்டும்
5-வது வாரம்
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
மாதர்கள் கூட்டம் அலைமோதுகிறது
கார்த்திக் ராதா
தியாகராஜன் நடித்த
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)

14th & 15th
ரீகல் (யாழ்நகர்) தினசரி 5 காட்சிகள்
PETER SELLERS HERBOT LOM in
Pink Panthar Strike Again
(Comedy-Color)
18-6-82 முதல் ஸ்ரீதரின்:
மோகனப் புன்னகை

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன் — ஜெயசித்திரா நடித்த
இன்ஸ்பெக்டர் மனைவி
Coming soon! BRUCE LEE in
THE GAME OF DEATH

ஸ்ரீதர் (யாழ். நகர்)
10-30, 2-00, 6-00, 9-30
The Other Side of Midnight
கொழும்பில் 100 நாட்களுக்குமேல் ஓடி ஆங்கிலப்படத்தில் கூடிய வசூலைக்கொடுத்த அதி உன்னத சித்திரம்

# ''பிள்ளைகளைக் கட்டுப்பாடாக பெற்றோர் வளர்க்கவேண்டும்''

## கல்லூரி பரிசளிப்பு விழாவில் யாழ். பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்

[அரியாலை

''இருபதாம் நூற்றாண்டில் விஞ்ஞானம் வளர்ச்சியடைந்திருப்பதுபோல் தொழில்நுட்பத் துறையும் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது. எமது மாணவர்கள் இவற்றில் போதிய திறமையுடன் பயிற்சிபெற்று உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நல்ல வேலைவாய்ப்புக்களைப் பெற்றுச் சிறப்புடன் வாழவேண்டும் விஞ்ஞானத்திலும், தொழிற்பயிற்சியிலும் மாணவர் கவனஞ் செலுத்தவேண்டும்.''

இவ்வாறு யாழ்ப்பாணம் செங்குந்த இந்துக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்புவிழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்திய யாழ்ப்பாணம் பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ். சிவதாசன் பேசுகையில் குறிப்பிட்டார்.

### பெற்றோர் கடமை என்ன?

கல்லூரி அதிபர் திரு. ப. சுவாமிநாதசர்மா தலைமையில் நடைபெற்ற இப்பரிசளிப்பு விழாவில் திரு. எஸ். சிவதாசன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''பாடசாலைகளிலும் பல்கலைக்கழகத்திலும் விசேஷமாக சமுதாயத்திலும் போட்டியுணர்வு அவசியமாகிறது. இப்போட்டிகளில் வெற்றி பெற்றால்தான் நாம் வாழ்வில் முன்னேற்றமடைய முடியும். யாழ்ப்பாண மக்கள் விடா முயற்சியுடன் கல்விகற்றதன் மூலமே இன்று அவர்கள் உலகின் எல்லாப் பாகங்களிலும் விசேஷமாக நமது நாட்டிலும் மிகவும் உயர்ந்த பதவிகளை வகித்துவருகிறார்கள். அறிவுக்காகப் பெறும் கல்வியின் மூலமே சமுதாயத்தில் கட்டுப்பாடும் ஒழுங்கும் ஏற்பட முடியும் தலைமைதாங்கும் பண்பு, அறிவும் ஒழுக்கமும் கட்டுப்பாடு யாவும் சிறந்த கல்வியின் மூலமே உண்டாகும். எமது வல்லமையின்மூலம் விதியைக் கூட மாற்றியமைக்கலாம். அறநூல்களைக் கற்பதன் மூலமே சிறந்தவர்களாக நாம் வாழ முடியும். அறநூல்களில் கூறப்படும் அறிவுரைகள் எம்மிடம் கட்டுப்பாட்டையும் ஒழுக்கத்தையும் வளர்க்கின்றன.

பெரியோர்களின் வாழ்க்கை முறைகளைக் கற்று அறிவதன் மூலமே மாணவர்களின் உள்ளங்கள் விரிவடைகின்றன சிறந்த முறையில் கல்விகற்பதன்மூலமே மாணவன் கல்லூரி வாழ்க்கை முடிய சமுதாயத்தல் சிறந்த முறையில்வாழ முடியும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்புவதன்மூலம் தமது பிரச்னைகள் முடிந்துவிட்டதென்று எண்ணுகிறார்கள். தமது பிள்ளைகளை வீடுகளிலும் சமுதாயத்திலும் கட்டுப்பாட்டுடன் வளரச் செய்யும் பரிய பொறுப்பு பெற்றோருடையதாகும் ஒழுங்கு கட்டுப்பாட்டுடன் வாழும் மாணவனே சமுதாயத்தில் சிறந்தவனாகவும் தலைமைதாங்கும் பண்புள்ளவனாகவும் வாழ முடியும்.''

போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கானபரிசில்களை திருமதி சரோஜினி சிவதாசன் வழங்கினார். ஆசிரியர் திரு. சண்முகலிங்கம் நன்றி தெரிவித்துப் பேசினார். கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# இன்றைய பலன்

வைகாசி மாதம் 31ம் திகதி

திங்கட்கிழமை

(14—6—82)

மேடம்: சிந்தனை அலைகள் சிறிப்பாயும். எதற்கெடுத்தாலும் ஆத்திரப்படுவீர்கள். சகோதரத்தின் உடல் நிலை பாதிக்கப்படலாம். சுமாரான நாள்.

இடபம்: புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். அரசியல் வாதிகளுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும். எடுத்த கருமத்தை முடிப்பதில் வெற்றியடைவீர்கள்.

மிதுனம்: அதிஷ்டகரமான தினம். சிலர் வாழ்க்கையில் திரவிய இலாபத்திற்கும் இடமுண்டு. மனைவாழ்வில்மகிழ்ச்சி தென்படும். நல்ல தினமாகும்.

கடகம்: உறவாடிக்கெடுப்பதற்குப் பகையாளிகள்வருவர். உற்சாகம் குன்றும். பிரயாணத்தின்போது பொருள் தவறக் கூடும்.

சிங்கம்: மனம் நிறைந்த வாழ்வு. மக்களால் மகிழ்ச்சி இவற்றுடன் கண்ணியமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

கன்னி: முன்னேற்றப்பாதையில் தடைகள் பல தாக்கும். இருள் படர்ந்த சம்பவமொன்று மீண்டும் நினைவுக்கு வந்து வேதனையைத்தரும்.

துலாம்: தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும். தெய்வ நம்பிக்கை மேலிடும். நினைத்ததைச் சாதிப்பதில் இன்று முன்னணியில் நிற்பீர்கள்.

விருச்சிகம்: பதவியில் உயர்வுக்கு இடமுண்டு வியாபாரத் துறையில் முன்னேற்றம் காணப்படும். இடமாற்றத்திற்கான ஆலோசனையும் உருவாகும்.

தனு: வாழ்க்கையில் புதிய அபிவிருத்தி தென்படும். சுற்றுடலில் உற்சாகமான வரவேற்புக்கிடைக்கும். அதிகவருவாய்க்கு இடமுண்டு.

மகரம்: எண்ணத்தின் தாக்குதல்கள் நெஞ்சைப் புண்ணாக்கும். அற்ப விடயத்திற்குக் கூட பொல்லாங்கு கேட்க நேரிடுவீர்கள்.

கும்பம்: பேச்சுவார்த்தைகளில் உணர்ச்சி வசப்படாதிருப்பது விரும்பத் தக்கது. அவசர முடிவின் மூலம் விரோதத்தை தேடிக் கொள்வீர்கள்.

மீனம்: பிரச்னைகள் பல இன்று நல்ல முடிவைத்தரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பேச்சில் நிதானம் பெருமை தரும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# கிரிக்கெட்: பரியோவான் கேகாலையை வென்றது

(அரியாலை)

கேகாலை மகாவித்தியாலயத்திற்கும், யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரிக்கும் இடையே யாழ். சென்ற். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 17 வயதுக்குட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் போட்டியில் பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டி இனிங்சாலும், 10 ஓட்டங்களாலும் வெற்றியீட்டியது.

முதலாவது முறையாகத் துடுப்பெடுத்தாடிய பரி.யோவான் கல்லூரிக் கோஷ்டி 2விக்கட்டுகளை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றுத் தனது ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

இக்கோஷ்டியைச் சேர்ந்த முரளிதரன் 60 ஓட்டங்களையும், கதிர்காமநாதன் வெளியேறாமல் 77 ஓட்டங்களையும் பெற்றனர். இவர்களை எதிர்த்துப் பந்துவீசிய ஜெயவர்த்தனா 38 ஓட்டங்களுக்கு 1 விக்கட்டைக் கைப்பற்றினார்

கேகாலை மக வித்தியாலயம் தனது முதலாவது ஆட்டத்தில் எல்லாவிக்கட்டுகளையும்இழந்து 102 ஓட்டங்களைப் பெற்றது. இக்கோஷ்டியைச்சேர்ந்த அமரசேகரா, நவரட்ணா ஆகியோர் முறையே 26, 21 ஓட்டங்களைப் பெற்றனர். இவர்களை எதிர்த்துப் பந்து வீசிய சக்திகுமார் 15 ஓட்டங்களுக்கு 4 விக்கட்டுகளையும், ஆர்னல்ட் 21ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளையும் பெற்றனர்.

கேகாலை மகாவித்தியாலயக் கோஷ்டி தனது இரண்டாவது ஆட்டத்தில் எல்லா விக்கட்டுக்களையும் இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றனர். இக்கோஷ்டியைச் சேர்ந்த விக்கிரமசிங்கா 10 ஓட்டங்களைப் பெற்றார். இவர்களை எதிர்த்துப் பந்து வீசிய சந்திரகுமார் 18 ஓட்டங்களுக்கு 5 விக்கட்டுகளையும், எஸ். திருக்குமார் 16 ஓட்டங்களுக்கு 3 விக்கட்டுகளையும் கைப்பற்றினர். (அ)

# மாவட்ட இறுதிப் போட்டியில் பங்குபற்றும்

(அரியாலை)

யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களத்தினால் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட தேசிய விளையாட்டான 'எல்லே' மாவட்ட அரையிறுதிப் போட்டியில் கலந்துகொண்ட கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி தன்னுடன் எதிர்த்து விளையாடிய சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக் கோஷ்டியை 4-2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோற்கடித்து மாவட்ட இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளத் தெரிவாகியுள்ளது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான இப்போட்டி ஆரம்பம் முதல் இறுதிவரை மிக விறுவிறுப்பாக நடைபெற்றது. இப்போட்டிக்குக் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி உடற்கல்வி ஆசிரியர் திரு. எஸ். ஜெயரத்தினம் மத்தியஸ்தம் வகித்தார். [அ]

# இன்று...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சாலை அதிபர் திரு. சி. இராசநாயகம், யாழ்ப்பாண வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொ. சிவஞானசுந்தரம் ஆகியோரும் கலந்துகொள்ளுகிறார்கள்.

மாணவ மாணவிகளின் காவடி நடனம், உடற்பயிற்சி, நடனம், கோலாட்டம், வாக்குறுதி இலக்கிய நாடகம், நகைச்சுவை நாடகம் மற்றும் பல நிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெறும். (அ)

## இடைநிறுத்தப்பட்ட தமிழ் ஒலிபரப்பாளருக்கு மீண்டும் நியமனம்?

[கொழும்பு]

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன தமிழ்ச்சேவையில் அண்மையில் இடைநிறுக்கம் செய்யப்பட்ட தமிழ் ஒலிபரப்பாளர், மீண்டும் நியமிக்சப்படலாம் எனத் தெரியவருகிறது.

குறிப்பீட்ட ஒரு காரணம் மீது இவர் இடைநிறுத்தம் செய்யப்பட்டார் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டபோதிலும் அதில் இவருக்குத் தொடர்பில்லை என்றும் மீண்டும் அதே பதவியில் இவர் நியமனம் பெறலாம் என்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

## பஸ்சாரதி. ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்பட்ட காரணமேதுமற்ற தாக்குதல் இ. போ. ச. ஊழியர்சள் மத்தியில் அமைதியின்மையைத் தூண்டியுள்ளது. இச் சம்பவம் குறித்து உடனடியாக விசாரணைகளை மேற்கொள்வதுடன் இச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களுக்கு தகுந்த தண்டனையை வழங்குமாறு கோருகின்றோம்'' என்று மேற்படி தந்தியில் கோரப்பட்டுள்ளது. (சி)

## மிளகாய் உற்பத்தியாளர் பாதிப்பு

[மன்னார்]

மேலிடத்து உத்தரவையடுத்து பூநகரி பா. நோ. கூ. சங்கத்தில் மிளகாய் கொள்முதல் செய்வது இடைநிறுத்தப்பட்டுள்ளதால் மிளகாய் உற்பத்தியாளர் பெரும்பாதிப்படைந்துள்ளனர்.

அதே நேரத்தில் பூநகரி பல. நோ. கூ. சங்கத்தில் பெருந்தொகையான மிளகாய் தேங்கிக் கிடப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பல. நோ. கூ. சங்கம் மிளகாய் உற்பத்தியாளரிடமிருந்து மிளகாயைக் கொள்முதல் செய்யாததால் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி 21 ரூபா உத்தரவாத விலையான மிளகாய் தனிப்பட்ட வியாபாரிகள் 15ரூபாவுக்கு கொள்முதல் செய்கின்றனர்.

மிளகாய் உற்பத்தியாளர்களின் நலன் கருதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மிளகாய் உற்பத்தியாளரிடமிருந்து உத்தரவாத விலையான 21 ரூபா வீதம் மீண்டும் மிளகாய் கொள்வனவு செய்வதை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ். அரசாங்க அதிபருக்கும் நெல் சந்தைப்படுத்தும் சபைத் தலைவருக்கும் பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருக்கு தந்தி மூலம் அறிவித்துள்ளார்.

## பிணை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

இளைஞர்களது பிணைமனுவை சிரேஷ் [illegible] ரு. [illegible] ன் இன்று தாக்கல் செய்வார்.

## இப்படியும் நடக்கிறது

ஊர்காவல் படையில் சேருவதற்கு இந்துக்கள் தகுதியற்றவர்களா?

ஊர்காவல் படையில் சேருவதற்கான விண்ணப்பப்பத்திரத்தில் காணப்படும் ஐந்தாவது கேள்வியின் ஒரு (F) பிரிவு—

நீர் YMBA/YMCA/YMMA மன்றங்களில் ஒரு அங்கத்தவராக இருக்கின்றீரா அல்லது இருந்தனீரா என்று கேட்கிறது.

இக்கேள்வியில் பௌத்த / கிறிஸ்தவ / இஸ்லாமிய இளைஞர் மன்றங்கள் பற்றி மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்து இளைஞர் மன்றம் (YMHA) பற்றி எதுவும் இல்லை!

இந்துக்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று கொள்ளலாமா?

'ஊடுருவ'

## கிராமங்கள் தோறும் இ. சே. மன்றக் கிளைகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய இளைஞர் சேவை மன்ற வடபிராந்தியப் பிரிவு யாழ்ப்பாண மாவட்டத்தில் கிராமங்கள்தோறும் இளைஞர் சேவை மன்றக் கிளைகளை அமைப்பதில் தீவிர கவனம் செலுத்தி வருகிறது.

கிராமங்கள் தோறும் பாரிய அபிவிருத்தி வேலைகளைச் செயல்ப்படுத்தும் திட்டத்தின் கீழ் இந்தக் கிளைகள் அமைக்கும் வேலைகள் நடைபெற்ள வருகின்றன.

இலங்கை தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் பிராந்திய அலுவலர்கள்இந்தமுயற்சிகளில்ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அமைக்கும் வேலைகள் நடைபெற்றுவருகின்றன. அண்மையில் வேலணையில் நிறுவப்பட்ட இளைஞர் சேவைமன்றக் கிளையின் மூலம் வேலணைகிழக்கு வழுக்கையாற்றுத்திட்ட அணைக்கட்டுவேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மண்டைதீவில் இளைஞர் சேவைமன்றஅங்குரார்ப்பணக் கூட்டம் ஒன்று நடைபெற்றபோது சுமார் எழுபத்தைந்துக்கு மேற்பட்ட இளைஞர்கள் கலந்துகொண்டனர். இந்த இளைஞர்மன்றத்திற்கு உதவியாக ஆலோசனைச்சபை ஒன்றும் நிறுவப்பட்டது.

மண்டை தீவுகிழக்கு கண்ணகை அம்மன் கோவிலுக்குச் செல்லும் கடற்கரை வீதியை புனரமைப்பதென இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இவ்வீதி திட்டத்திற்கென முதல் கட்டநிதியாக சுமார் இருபதினாயிரம் ரூபா ஒதுக்குவதென இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

தேசிய இளைஞர் சேவைமன்றத்தின் பிரதேச அலுவலர் திரு கே முருகையா இக்கூட்டத்தை நடத்தினார். மண்டைதீவு கிராமோதய சபை உறுப்பினர்களும் தலைவரும் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர், (வண்-நிரு)

## 40 நாள் துக்கம்

குவைத் ஜூன் 13

சவூதி அரேபியா மன்னர் காலித் மறைவு குறித்து குவைத், கட்டார், ஆகிய இரு நாடுகளும் 40 நாட்களுக்கு துக்கம் அனுஷ்டிக்கவிருக்கின்றன.

ஒமான் 3 நாட்கள் துக்கம் அனுஷ்டிக்கும், எகிப்தில் 2 வாரங்கள் துக்கம் அனுஷ்டிக்குமாறு எகிப்திய ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

எகிப்து ஜனாதிபதி இறுதி சடங்கில் கலந்துகொள்ள சவூதி அரேபியா சென்றுள்ளார். மெய்பாரா வானொலி இடையில் நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டது.

## கொழும்பு ஆஸ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்து யாழ் அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த தபால் ஊழியர்கள் இருவரும் கொழும்பு பிரதம ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட மூன்று தபால் ஊழியர்களில் ஒருவர் பலியானார், மற்றைய ஊழியர்களான கே. எச். ஜே. பெரேரா, விமலசேன ஆகிய இருவரும் ஆபத்தான நிலையைத் தாண்டிவிட்டனர். இந்த இருவருமே கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டவர்களாவர். [மா]

## தராசுக்கு முத்திரை பொறிக்கவில்லை

(துணுக்காய்)

பரந்தன் கரைச்சி வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் புளியம் பொக்கணை கிளையிலுள்ள 250 கிலோகிராம் மேடைத் தராசுக்கு 1982ம் ஆண்டுக்குரியமுத்திரை பொறிக்கப்படவில்லையென யாழ். விலைக்கட்டுப்பாடு அதிகாரிகள் வழக்கு தொடர்ந்திருந்தனர்.

கிளிநொச்சி நீதிமன்றத்தில் நடைபெற்ற இவ் வழக்கில் விலைக்கட்டுப்பாட்டு பிரிவினரின் குற்றச்சாட்டுகள் ஆராயப்பட்டபோது போதிய ஆதாரங்கள் நிரூபிக்கப்படாததால் நீதிமன்ற செலவுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டிருந்ததாக புளியம் பொககணை ப. நோ. கூ. சங்க கிளைமுகாமையாளர் திரு, இ. இரத்தின விநாயகர் தெரிவித்தார்.

## தனியார்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் இடம் பெற்றிருப்பதால் குறிப்பிட்ட விலாச எழுத்துக்களை உடைய தட்டச்சுயந்திரங்களைத் தேடியே ஐம்பதுக்கும் அதிகமான தனியார் கல்வி நிலையங்களில் சோதனையிடப்பட்டது.


ஹோம் பிஞன்ஸ் லிமிட்

நவீனமானதும் திறமைமிக்கதுமான

ORION-12'' (T. V. BLACK and WHITE)

விற்பனை செய்கின்றது

உடனே கட்டுப்பண முறையில் பெறலாம்

எம்மிடம் உள்ள அவசர தேவையான

மற்றைய பொருட்கள்

HAWAI-LUXURY, PEDESTAL FAN-TABLE FAN, PHOENIX CYCLES - மோட்டார் சைக்கிள் ஓட்டிகளுக்கு HELMET.

இப் பொருட்களை 420, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கத்திலும் பெறலாம்.

தலைமை காரியாலயம்: ஹோம் பிஞன்ஸ் லிமிட், இல. 463, காலி வீதி, கொழும்பு—3, தொலைபேசி;58910

கிளை காரியாலயம்: ஹோம் பிஞன்ஸ் லிமிட், இல. 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 8310



உங்கள் பணத்திற்கு....

27%

வட்டி...



சிறந்த பாதுகாப்பு வருமானம் உத்தரவாதம்

25% 2 வருட வைப்புப்பணத்திற்கான காலமுதிர்வு வட்டி...

23% 2 வருட வைப்புப்பணத்திற்கான மாதாந்த வட்டி...

21% 1 வருட வைப்புப்பணத்திற்கான மாதாந்த வட்டி...

மகாராஜா முதலீட்டு (வரையறுக்கப்பட்ட) நிதிநிறுவனம்

122 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 8267

கவர்ச்சிகரமான வட்டி விகிதங்கள் 27% வரையுண்டு

| | ரூ 500க்கு அதிகமான வைப்புக்கு மாதாந்தம் வட்டி | ரூ 500க்கு அதிகமான வைப்புக்கு காலமுதிர்வு வட்டி | 1,00,000 ரூபாய்க்கு அதிகமான தொகைக்கு காலமுதிர்வின்போது |
|---|---|---|---|
| 6 மாதம் | — | 18% | 21% |
| 12 மாதம் | 21% | 22% | 23% |
| 24 மாதம் | 23% | 25% | 27% |

இயக்குனர்கள்

1. திரு ஆர். மகாராஜா (நிர்வாக இயக்குனர்)
2. திரு. ஆர். இராஜமகேந்திரன் (நிர்வாக இயக்குனர்)
3. திரு. வி. என். குமாரசாமி, F.C.A (Eng. & Wales), ATII (Eng.) M.Inst. A.M (Eng.), AMBIM(Eng.), F.C.A.(Cey.)
4. திரு. பி. மகிந்தா B. Sc. (Hons)
5. திரு. வி. சண்முகம் LLB (Lond) Hons A I B (Lond) சட்டத்தரணி
6. திரு. டி ஜே. குணவர்த்தன B.Sc., A.C.A. A.C.M.A
7. திரு. டபிளயு பலநாயக்கா MBIM (Eng.)
8. திரு. ஈ குணசேகரா

சுருக்கமான தகவல்கள்

| நிதி அறிக்கை | 1977/78 ரூபாய் | 1978/79 ரூபாய் | 1979/80 ரூபாய் |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் | 4,030 | 250,000 | 250 000 |
| ஒதுக்கிய மூலதனம் | 143,588 | 246,615 | 1 706 147 |
| வைப்பு மூலதனம் | 3,579,820 | 325,480 | 12,139,162 |
| நிகரலாபம் (வரிகட்ட முன்) | 181,417 | 661 461 | 2,135,874 |
| நிகரலாபம் (வரிகட்டிய பின), | 163,916 | 453,777 | 1 635,873 |
| பங்குலாபம் | — | 250,000 | 187,500 |

வியாபார நோக்கங்கள்

★ முதலீட்டு வைப்பு
★ கைத்தொழிலாளர்களுக்கு. இயந்திராதிகள், மூலப்பொருள் இறக்குமதிக்கு கடன்வசதி
★ காப்புறுதி முகவர்.

ஸ்தாபகம்: 29-09-1976.
தலைமையகம்: யூனியன் பிளேஸ், கொழும்பு 2
காரியாலயம்: 54. பாங்ஷால் வீதி, கொழும்பு.


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63 இலக்க அச்சகத்தில் 1982 ஜூன் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.